223471

# கிராமானுகூலன்

1929 ஜூலை-ஆகஸ்ட்

JL
Y31mN27GR
N29.2.11
223471

1480

Regd. No. M. 1930. வந்தேமாதரம். Annual Sub. Rs. 2

# கிராமாநுகூலன்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.)

# GRAMANUKULAN.

புத்தகம் 2 | 1929-ஸு ஜூலை ஆகஸ்டுமீ சுக்கிலஸு ஆடிமீ | ஸஞ்சிகை 11

விஷயசூசிகை.


| | | | |
|---|---|---|---|
| 1. | நிலவரிக்கொள்கை | பத்திராதிபர் | 215 |
| 2. | ஸ்ரீ வியாஸபூஜா மகோத்ஸவம் | ,, | 216 |
| 3. | வாதகூனையில்லா பிரபலவிவாஹம் | ,, | 216 |
| 4. | அத்வைத சபா | ,, | 216 |
| 5. | நன்கொடை | ,, | 217 |
| 6 | திருப்பனந்தாள் ஆதீனம் | ,, | 217 |
| 7. | நன்னிலம் தாலூகாபோர்டு எலக்ஷன் | ,, | 218 |
| 8. | மன்னார்குடி தாலுகாபோர்டு எலக்ஷன் | ,, | 218 |
| 9. | கும்பகோணம் தாலூகாபோர்டு தலைவர் | ,, | 218 |
| 10. | சட்டசபையும் கி. உ. சங்கங்களும் | ,, | 218 |
| 11. | சுவாமிமலை ஆஸ்பத்திரி திறப்புவிழா | ,, | 218 |
| 12. | பண்டைத்தமிழரின் மேம்பாடு (ஸ்ரீமான் வை. சா. வேங்கடராம ஐயர்) | | 219 |
| | | | 220 |
| 13. | இலம்பாவனம் பிரமோத்ஸவம் | | 221 |
| 14. | ஆனைடபார்கோவில் ஆனித்திருமஞ்சனமகோத்ஸவம் | ,, | 222 |
| 15. | கிராம பஞ்சாயத்துகளும், கிராம கோர்ட்டுகளும் (சேங்காலிபுரம் ஸ்ரீமான் V. பஞ்சாபகேசய்யர்) | | 223 |
| 16. | ஆரம்பக்கல்வி (ஸ்ரீமான் பரிமணபல்லவராயர்) | | 224 |
| 17. | அன்னதானபலன் | ,, | 226 |
| 18. | நன்னிலம் தாலூகா கி. உ. மிமோரியல் | ,, | 227 |
| 19. | ,, கலெக்டருக்கு வரவேற்புபத்திரம் | ,, | 227 |
| 20. | மன்னார்குடி தாலூகா கி. உ. மிமோரியல் | ,, | 227 |
| 21. | கௌவர்ன்மெண்டு ஆர்டர் | ,, | 228 |
| 22. | மன்னார்குடி தாலூகா கி. உ. கலெக்டருக்கு வரவேற்புபத்திரம் | | 228 |
| 23. | கும்பகோணம்தாலூகா கி. உ. சங்கம் | | 229 |
| 24. | ,, மிமோரியல் | ,, | 229 |
| 25. | கிராம உத்தியோகஸ்தர்கள் (ஸ்ரீமான் P. ராமஸ்வாமிஐயர், விழுப்புரம், கி. உ. சங்கம் காரியதரிசி) | | 230 |
| 26. | ஓர் கிராமமுன்சிபுக்கு வெள்ளிஜூபிலி கொண்டாட்டம் | | 231 |
| 27. | ராஜா ராமபாலியன் or ரஜபுத்திர தேசபக்தி (ஸ்ரீமான் S. மகாலிங்க சர்மா) | | 231 |
| 28. | விளம்பரங்கள் | | 233—234 |


சந்தா விபரம்.
உள்நாடுகளுக்கு வருடசந்தா தபாற்கூலி உள்பட ரூ. 2—0—0
வெளிநாடுகளுக்கு டிை ,, 2—8—0
தனிப்பிரதி டிை ,, 0—3—0

விளம்பர விகிதம்
பக்கம் 1 (2 கலம்) மீ 1-க்கு ரூ. 10
டிை ½ (1 கலம்) டிை ,, 5
¼ கலம் ½-க்கு மீ 1-க்கு ரூ 2—8
⅛ இஞ்சு 1-க்கு டிை அணா 8

N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.
கிராமாநுகூலன் ஆபீஸ்:---கும்பகோணம்.

# கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்கள்.

ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்.

ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M. L. C.

போஷகர்.

ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை அவர்கள்,

கிராம முன்சீப் திருப்பனந்தாள்.

## கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ,, | ... 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | ... 25 | 0 | 0 |
| வருட சந்தா இந்தியா, பர்மா, சிலோன் | ... 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர், பினங்கு மோரீஸ், நெட்டால்) | ... 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதாரர்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


கும்பகோணம் தென் இந்தியா
கன்பெக்ஷனெரி பாக்டெரியில் தயாரிக்கப்படும்
பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்!
ஏன்?
ஏன் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே? வெகு நேர்த்தியானவை என்று புகழ்பெற்றது!
விலை நயம்! ஒருமுறை தருவித்துப் பாருங்கள்!! உண்மை விளங்கும்!!!
விலை விபரத்திற்கு உடனே எழுதுங்கள்!
The Southern India Confectionery Factory,
KUMBAKONAM.



6 SEP 1929
223477



ரிஜிஸ்டர் நே M 1930] வந்தேமாதரம்.


# கிராமானுகூலன்.


(ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை)


" ஒன்றுபட்டா லுண்டே வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேதுவேண்டும்" (பாரதி)

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே." (ஔவை)


| புத்தகம் 2 | சுக்கிலவருஷ ஆடிமீ | ஸஞ்சிகை 11 |
|---|---|---|


## நிலவரிக் கொள்கை.

நிலவரியானது மற்றவரிகளைப்போல் சட்டபூர்வமாக விதிக்கப்படவில்லையென்றும் அது நியாயமாகவுமில்லையென்றும் அதற்கோர் சட்டம் ஏற்படுத்திவிட வேண்டுமென்றும் வெகு நாளாய் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. பம்பாய் ராஜதானியில் பார்டோலி வரிகொடா இயக்கத்திலிருந்து இந்தவிஷயத்தை இனிதள்ளிப்போடக்கொண்டு காலங்கடத்த முடியாதென்று கெவர்ன்மெண்டாரும் உணர ஆரம்பித்து விட்டார்கள். அந்த ராஜதானியில் இன்னும் 4-தாலூகாக்கள் மறுசெட்டில்மெண்டு முறையை ஆக்ஷேபித்து செய்துகொண்ட கோரிக்கையில் நிலவரிக்கொள்கையை நிர்ணயிக்காமல மறுபைசல் செய்யும் விஷயம் அங்கீகரிக்கப்படமாட்டாதென்றும வரிகொடா இயக்கம் ஆரம்பிக்கும்படி நேரிடுமென்றும் தெரிவித்துக் கொண்டார்களாம். அதன் உண்மையை அனுபவத்தில் உணர்ந்த பம்பாய்கெவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் நிலவரிக்கொள்கையை நிர்ணயிக்க சட்டம் செய்ய ஏற்பாடு செய்வதாகவும் அதுவரையில் மறுபைசல் முறையை நிறுத்திவைப்பதாகவும் ஒரு அறிக்கை வெளியிட்டு விட்டனராம். பம்பாய் ராஜதானியில் நிலவரிக்கொள்கைலீக் என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதுவிஷயமாய் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள கட்டுப்பாடான முறையில் ஸ்ரீமான் வல்லபாய்படேல் தலைமையின்கீழ் ஓர் இயக்கம் ஆரம்பித்திருக்கிறது. ஸ்ரீமான படேல் தலைமைவகித்து நடத்தும் இயக்கம உண்மையாகவும், உறுதியுடனும், தன்னலத்தியாகத்துடனும், அஹிம்சாதர்மத்தையனுசரித்தும் இருக்குமாகையால் வெற்றிஏற்படுவதற்குச்சந்தேகமில்லை. இந்த சமயத்தில் நமது சென்னை ராஜதானியிலும் அவ்வித இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று நாம் சொல்லத்தேவையில்லை. நிலவரி விஷயத்தில் இந்த ராஜதானியில் மிராசுதார்கள்படும் அவஸ்தை பம்பாய் ராஜதானியில் இருப்பதைவிட அதிகமேயாகும். சரியான தலைவர்களில்லாக் குறையினாலேயும் கட்டுப்பாட்டுடனும் உறுதியாகவும் அஹிம்சாதர்மத்தைக் கைவிடாமலும் நடக்கும் சக்தி விருத்தி செய்யப்படாமையினாலேயும் பூரா கஷ்டங்களும் வெளியில் தெரியாமலும் நிவர்த்தியாக மார்க்கமில்லாமலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் நாளது ஆகஸ்டுமாதத்தில் வேதாரண்ணியத்தில் கூடும் தமிழ் மாகாண மகாநாட்டிற்கு தலைமை வகிக்க ஸ்ரீமான் வல்லபாய்படேல் இசைந்திருப்பது அதிர்ஷ்டவசமேயாகும். இச்சந்தர்ப்பத்தைக் கைவிடாது அவர் தலைமையில் ஓர் மிராசுதார்கள் மகாநாட்டைக்கூட்டி நிலவரி விஷயமானகொள்கைகளை நிர்ணயித்துக்கொண்டு அதன்படி சட்டசபையில் சட்டம் செய்யப்படவேண்டியது இன்றியமையாக்கடமையாகும். தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் ராவ்சாகிப், C. R. லெக்ஷிமிவராகய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் பந்துலு ஐயர் அவர்களும் இது விஷயமாய் முயற்சியெடுத்துக்கொண்டிருக்கின்றனர். மிராசுதார்கள் மகாநாட்டிற்கு ஏராளமாய் விஜயம் செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேணுமாய் பிரார்த்திக்கிறோம்

# ஸ்ரீவியாஸ பூஜா மகோத்ஸவம்.

கும்பகோணம் ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜெகத்குருஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் இவ்வருஷம் ஸ்ரீவியாசபூஜையை திருக்கோவலூர் சமீபம் பினாகினி நதிக்கரையிலுள்ள ஐம்பை என்கிற ஜெம்புகேசுவரம்,திருவரங்கம்,மாத்ருபூதேசுவரம், இந்தக்ஷேத்திரங்களில் அந்தர்கதமான மணலூர் பேட்டை என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் நாளது ஆடிமீ 6உ வெகு விமரிசையாகச் செய்தார்கள். அதற்கென கோவிலில் பெரிய பந்தல்கள் போடப்பட்டு மிக அழகாய் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. பல ஆயிரக்கணக்கான பிராமணர்களும் இதரர்களும் விஜயம்செய்து தரிசித்து ஈஸ்வர கடாக்ஷத்துக்குப் பாத்திரமானார்கள். ஸ்ரீபரமாசாரியாள் செய்தபூஜையை நேரில்பார்த்த எந்த நாஸ்திகனுக்கும் ஆஸ்திக புத்தியுண்டாகாமல் போகாதென்பது திண்ணம். நாஸ்திகம் ஓங்கி ஆஸ்திகம் ஒடுங்கிவரும் இக்காலத்தில் ஸ்ரீபரமாசாரியாள் யாத்திரை செய்து உபந்நியாசங்கள் புரிந்து பாமரஜனங்களுக்கு நல்லுபதேசம் செய்துவருவது மிகவும் அவசியமானதே. சாதுர்மாஸ்ய சங்கல்பப்படி இரண்டுமாதகாலம் அந்த கிராமத்திலேயே தங்கியிருக்கிறபடியால் தரிசனம் செய்துகொள்ளவேண்டியவர்கள் இந்தசமயத்தை நழுவவிடமாட்டார்களென்று நம்புகிறோம். சிறு கிராமமாயிருந்தபோதிலும் மிக பக்தி சிரத்தையுடன் ஸ்ரீஜெகத்குரு ஸ்ரீ ஆச்சாரியஸ்வாமிகளை ஆராதித்துவரும் கிராம மகாஜனங்கள் சுபிக்ஷமடைய ஸ்ரீதிரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்திரமௌளீஸ்வரர் அனுக்கிரகம் புரிவாராக.

நமது "கிராமானுகூலன்" ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அவர்களை தெரிசித்து தைரியத்துடன் தேசக்ஷேமத்திற்கு உழைக்கும்படி ஆக்ஞையும் அனுக்கிரகமும் பெற்று தேசசேவை புரியவந்திருக்கிறான்.

## வரதக்ஷிணையில்லா பிரபல விவாஹம்.

குன்னம்ஸ்ரீமான் S.சுப்பிரமணியஅய்யரவர்கள் குமாரன் சிரஞ்சீவிராமமூர்த்திக்கும் ஆதமங்கலம் ஸ்ரீமான் A. வெங்கட்டரமணய்யர் அவர்கள் சகோதரி சௌபாக்கியவதி சீதா லெக்ஷ்மிக்கும் விவாகம் ஆதமங்கலத்தில் மிகச்சிறப்பாகநடந்தது இந்தவிவாகத்தில் வரதக்ஷிணை என்ற கொடிய பழக்கம்கிடையாது பிராமண போஜனம் நான்கு தினங்களிலும் சுமார் 2000-பிராமணர்களுக்கு குறையாமல் மிக விசேஷமாக நடந்தது அச்சிறு கிராமம் எலக்டிரிக்லைட்டுகளுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது ஸ்ரீமான் ஐயரவர்களின் உதாரகுணத்தையும் பூரி தெக்ஷிணை வகையராக்கள் தாராளமாய்க் கிடைத்ததையும் புகழ்ந்து கொண்டாடினார்கள் கிரகப்பிரவேசமும் சீர்காழியில் மிக விசேஷமாக நடைபெற்றது இந்த விவாகத்திற்கு ஜில்லாவிலுள்ள பிரமுகர்களும் பிரபுக்களும் கக்ஷிபேதமின்றி விஜயம்செய்து கௌரவித்தனர் தம்பதிகள் நீடூழிவாழக் கடவுளைப்பிரார்த்திக்கிறோம்

## அத்வைத ஸபா.

கும்பகோணம் அத்வைத சபாவின் 35-வது பண்டித சமாஜம் ஸ்ரீஜெகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரஹத்தைப்பெற்று சீர்காழியில் பரம்பரை பிரபு ஸ்ரீமான் குன்னம் S. சுப்பிரமணியய்யர் அவர்கள் ஆதரவில் மிக விசேஷமாகவும்,விமரிசையாகவும் நடைபெற்றது. இவ்வருஷத்தில் மகாவித்வான்களான பண்டிதர்கள் அதிகமாய் விஜயம்செய்திருந்ததுடன் ஆஸ்திக புத்தியுள்ள அநேக கனவான்களும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். எப்பொழுதும் பிராமணசமாராதனை செய்வதிலேயே பேராவல் கொண்ட ஸ்ரீமான் ஐயரவர்கள் சிரமம் என்பதை கவனியாது 8-நாளும் கூடவேயிருந்து யாதொரு குறைவுமின்றி சிறப்பாக நடத்திவைத்ததை எல்லோரும் மிகப்புகழ்ந்து கொண்டாடினார்கள். ஸ்ரீமான் ஐயரவர்களுக்கு தீர்க்காயுளையும் திடசரீரத்தையும் சகல சம்பத்தையும் அளித்தருள வேணுமாய் ஸ்ரீதிரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்திரமௌளீஸ்வரஸ்வாமியை பிரார்த்திக்கிறோம்.



# நன்கொடை.

கும்பகோணம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் கோவாபரேடிவ் சொஸைட்டியை லிக்விடேட் செய்துவிட்டபடியால் அதன் மீதித்தொகை ரூ 63—7—11-யும் "கிராமானுகூலன்" பத்திரிகைக்கு கொடுத்து விடவேண்டுமென்று பெரும்பான்மையான மெம்பர்கள் அபிப்பிராயப்பட்டு டிப்டி ரெஜிஸ்டிரார் ஸ்ரீமான் O. N. ராமசாமிய்யர் அவர்கள் அங்கீகரித்து நமது பத்திரிகைக்கு நன்கொடையாக அளித்ததை வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம். அதுவிஷயமாய் ஸ்ரீமான் ராஜகோபால ஐய்யங்கார் எழுதிய கடிதத்தை பிரசுரித்திருக்கிறோம். மற்ற கிராம உத்தியோகஸ்தர்களாகிய மெம்பர்களும் அதை அனுசரித்தே எழுதியிருக்கிறார்கள். அவர்கள் நம்பாலும், கிராமானுகூலன்பாலும், காட்டிவரும் அன்பிற்கு என்றும் மறவாநன்றியுடன் உழைக்க கடவுள் கிருபை புரிவாராக.

கும்பகோணம் கோவாபரேடிவ் சொஸைட்டிகளின் அட்மினிஸ்டிரேடிவ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு:

ஐயா!

தங்கள் 14—2—29 தேதி யுள்ள 5நெ. கடிதம் கிடைத்தது கிராமஉத்தியோகஸ்தர்கள்கோவாப்ரேட்டிவ் சொஸைட்டியை லிக்விடேட் செய்ததில் ஏற்பட்ட மிகுதித்தொகையை விநியோகிக்கப்படும் விஷயமாய்அடியில் கண்ட விதமாக அபிப்பிராயப் படுகிறேன் அதாவது:— ஷை சங்கமானது கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மைக்கருதி ஏற்படுத்தப்பட்டது ஆனால் துரதிஷ்டவசமாக அச்சங்கம் சரிவர நடைபெறாமல் லிக்விடேட் செய்யும்படி ஏற்பட்டுவிட்டபடியால் அவ்விதநோக்கத்துடன் ஏற்பட்ட சங்கத்தின் மிச்சத்தொகை அவர்களின் கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மைக்காக உபயோகப்படுத்துவதுதான் உசிதமாகவும் யுக்தமாகவும் இருக்கக்கூடும்என்று அபிப்பிராயப்படுகிறேன். மேலும், கிராம உத்தியோகஸ்தர்களின் நன்மையைக்கருதி மனப்பூர்த்தியாக தன்னலத்தைக்கருதாது பாடுபட்டு வேலையை இழந்தகூட கிராம உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றமே பெரிதென்ற அதேநோக்கத்துடன் திரிகரணசுத்தியாக அன்னாரின் குறைகளை நிவர்த்திப்பதே தன் கடமையென்று உண்மையுடனும், உறுதியுடனும், உழைத்துவருபவராகிய ஸ்ரீமான் ஆபத்சகாயஐயர் அவர்களின் அரும்பெரும் முயற்சியினாலேயே ஷை சங்கம் ஏற்பட்டது. அவராலேயே நடத்தப்பட்டு வந்தது. அன்னார் வேலையிலிருந்து நீக்கப்பட்டவுடன் அதை நடத்தி வருபவர் இல்லாதகாரணத்தினாலேயே லிக்விடேட் செய்யப்பட்டது என்பது அச்சங்கத்தின் மெம்பராக இருந்த எங்கள் ஒவ்வொருவருக்கும் நேரில் தெரிந்த விஷயம். ஆகையால் அச்சங்கத்தின் மிகுதித்தொகையை அன்னாரால் கிராமஉத்தியோகஸ்தர்களின் நன்மையைக் கருதி நடத்தப்பட்டுவரும் "கிராமானுகூலன்" என்ற மாதாந்தப்பத்திரிகைக்கு நன்கொடையாகக் கொடுத்து உதவுவது இரண்டு விதங்களிலும் யுக்தமானது என்று அபிப்பிராயப்படுகிறேன். அதாவது கிராம உத்தியோகஸ்தர்களின் நன்றி மறவாமை என்ற மேன்மையான குணத்தை வெளிப்படுத்துவதுடன் கிராம உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றத்திற்காக செலவு செய்ததாகவும் ஏற்படக்கூடுமாதலால் என் அபிப்பிராயத்தை இதர சகோதர மெம்பர்களுக்கு தெரிவிக்கப்படும் பக்ஷத்தில் அவர்களும் என் அபிப்பிராயத்தையே அங்கீகரிப்பார் களென்று நம்புகிறேன். தங்கள் உண்மையுள்ள;

S. M. ராஜகோபாலய்யங்கார்,
கர்ணம், சாக்கோட்டை.

## திருப்பனந்தாள் ஆதீனம்.

திருக்கைலாய பரம்பரை திருப்பனந்தாள் ஆதீனம், ஆதி ஸ்ரீ குமரகுரு பரஸ்வாமிகளின் குருபூஜை இவ்வாண்டு மிக விசேஷமாக நடைபெற்றது. அன்னதானத்தின் மகிமையும் வஸ்திர தானத்தின் மேன்மையும் எங்கும் விசேஷமாகத் தெரிந்தபடியால் சென்ற ஆண்டுகளைக் காட்டிலும் இம்முறை கூட்டம் அதிகமாயிருந்தது, பதினாயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஏககாலத்தில் இலை போட்டு தண்டவாளத்தின்மேல் வண்டியில் அன்னம் கொண்டுவந்து படைத்த காக்ஷியானது மிக மாக்ஷிமை பொருந்தியிருந்தது அநேக வித்துவான்கள் விஜயம் செய்திருந்தனர் ஒவ்வொருவரும் தம்தம் திறமையைக் காட்ட சந்தர்ப்பமளித்து, அவரவர்களுக்கு தகுந்தபடி சன்மானமும் அளிக்கப்பட்டது கல்வி, ஆராய்ச்சிகளில் மிகச்சிறந்து விளங்கும் இளைய பண்டார சன்னதி அவர்கள் நிர்வாகத்திறமையையும் அன்பையும் சிரத்தையையும் எல்லோரும் பாராட்டினார்கள் ஸ்ரீமடம் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான ஆதி திராவிடர்களுக்குஅன்னம் படைத்தது மிகப்போற்றக்கூடியதாகும்.

## நன்னிலம்தாலூகா போர்டு எலக்ஷன்.

நன்னிலம் தாலூகா போர்டு எலக்ஷன் அநேகமாய் முடிந்துவிட்டது. பிரஸிடெண்டு ஸ்ரீமான் C மருதவாணம் பிள்ளை M. L. C. அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்ற சர்க்கிள்களிலும் காங்கிரஸ்காரர்களே அதிக ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் பிராமணரல்லாத சுயேச்சை காண்டிடேட்டுகளாய்நிறுத்தி ஆதரித்துப்பார்த்தும்முடியவில்லை. நன்னிலம் காங்கிரஸ் தாலூகா என்னும் பெயரை நிலைநிறுத்திக்கொண்டுவிட்டது.

## மன்னார்குடி தாலூகாபோர்டு எலக்ஷன்

மன்னார்குடி தாலூகா போர்டுஎலக்ஷன்களும் அநேகமாய் முடிந்து விட்டது. பிரஸிடெண்டு ஸ்ரீமான் K. கோபாலகிருஷ்ணய்யருக்கு போட்டியாக ஜஸ்டிஸ் கக்ஷியார் தங்களாலான முயற்சிகள் செய்துபார்த்தனர். அந்த சர்க்கிளிலுள்ள ஓட்டர்கள் தங்கள் கடமையை பூரணமாக உணர்ந்து ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யரைத் தவிர வேறு யாருக்கும் ஓட் செய்ய முடியாதென்றும் பணப் பேச்சுடன் இந்தசர்க்கிளில் நுழைய வேண்டியதில்லையென்றும் எச்சரித்துவிட்டமையால் எலக்ஷன்தேதிக்கு முதல்நாளே ஒதுங்கிக்கொண்டு விட்டனர். பெயர் மாத்திரத்துக்கு போலிங்கு நடந்தபோதிலும் 218-ஓட்டர்களுக்குமேல் வந்து ஓட்டுசெய்ததானது ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யரிடத்தில் அவர்கள்வைத்திருக்கும் அன்பையும் மதிப்பையும் விளக்கிக்காட்டுவதாயிருந்தது. வைஸ்பிரஸிடெண்டு ஸ்ரீமான் குப்பையா முதலியாரவர்களும் ஸ்ரீமான், திருவேங்கடசாமிய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் கிருஷ்ணசாமிவன்னியர் அவர்களும் மிகப் பெரும்பான்மையான ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். எல்லோரும் காங்கிரஸ் கக்ஷியினரே. இந்த தாலூகாவும் காங்கிரஸ் தாலூகா என்னும் பெயரை ஸ்தாபித்துக்கொண்டுவிட்டது.

## கு, தாலூகாபோர்டு தலைவர்.

திருப்புறம்பயம் கிராமவாசிகள் கும்பகோணம் தாலூகா போர்டுதலைவர் ஸ்ரீமான், ராவ்சாஹிப், C. R. லெக்ஷ்மிவராக அய்யங்கார் அவர்களுக்கு 20-7-29ல் ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். அதில் அவர் தேவஸ்தானம் கமிட்டி மெம்பராகவும் பிரஸிடெண்டாகவுமிருந்து செய்துவந்திருக்கிற நல்ல வேலைகளையும் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் சங்கக்காரியதரிசியாயிருந்து செய்து வந்திருக்கிற முக்கியமான நற்காரியங்களையும் குறிப்பிட்டு புகழுரையாடி தங்கள்கிராமத்திற்கு ஓர் ஆஸ்பத்திரி தேவையென்றும் ரஸ்தாவை கப்பிப் போட்டுத்தர வேண்டுமென்றும், தங்கள் கிராமத்தில் ஒரு பெண்பாடசாலை ஏற்படுத்தித்தர வேண்டுமென்றும், ஆண்பாடசாலைக்கு ஒரு உபாத்தியாயரை அதிகமாக நியமிக்க வேண்டுமென்றும். தெரிவித்துக்கொண்டனர்,

மேற்கண்ட கோரிக்கைகளில் தம்மால் முடிந்த அளவு உதவி புரிந்து பூர்த்தி செய்து வைப்பதாக ஸ்ரீமான், அய்யங்கார் அவர்கள் வாக்களித்தார்.

## சட்டசபையில் கி. உ. க்கள்

ரயத்வாரி எல்லையிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஜமாபந்தி அலவுன்ஸ் கொடுக்கும் விஷயமாகக் கெவர்ன்மெண்டார் திட்டமான முடிவிற்கு வந்திருக்கிறார்களா என ஸ்ரீமான் வ பி செட்டி கேட்டதற்கு ரெவினியூ மெம்பர் இன்னும் அவ்விஷயம் ஒருவிதமாக முடிவு செய்யப்படவில்லையென்று கூறினார்.

ஸ்ரீமான் செட்டி:— இந்த விஷயத்தில் ஒருமுடிவுக்கு வருவதற்கு எவ்வளவு காலம் செல்லும்.

கனம் காம்பெல்:— இதை நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை.

கிராமமுன்சிபுக்கும் கர்ணத்துக்கும்வருஷத்தில்சப்ளை செய்யப்படும் பென்சில், பேனா, முதலியவைகளின் தொகை என்னவென ஸ்ரீமான் எ ரங்கநாத முதலியார் கேட்டதற்கு ரெவினியூ மெம்பர் இரண்டு வருஷத்துக்கு ஒருதரம் கர்ணத்துக்கு ஒரு பெனஹோல்டரும், கிராம முன்சிபுக்கு ஒரு பென்ஹோல்டரும், கொடுக்கப்படுவதாகவும், வருஷந்தோறும் இவ்விருவருக்கும் தனித்தனி 6-நிப்புகள் கொடுக்கப்படுவதாகவும். வருஷத்துக்கு ஒருதரம் கர்ணத்துக்கு கறுப்பு பென்சில் ஒன்று கொடுக்கப்படுவதாகவும், அவசியத்துக்கு ஏற்றபடி வெள்ளைக் காகிதம் கொடுக்கப்படுவதாகவும் கூறினார்.

கே:—183 ஸ்ரீமான் சோடிசெட்டி:— கிராமமுன்சிபுகளுக்கு ஏன் பென்சில் கொடுப்பதில்லை?

ப:—இதை நான் கவனிக்கிறேன்

கே:—இது போதியதா?

அக்கிராசனர்:- இந்தக் கேள்வி எழவில்லை.

இந்த ஸ்டேஷனரி அவர்களுக்கு அனுப்பப்படுகிறதா? அல்லது அவர்கள் வந்து வாங்கக்கொள்ள வேண்டுமா?

ப:— தாலூகா ஆபீசுக்கு வந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

டாக்டர் மல்லய்யா:-இவ்விதம் வந்துவாங்கிக்கொண்டு போவதற்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா? (சிரிப்பு

கே:—அதிக சப்ளை செய்யும் விஷயம் ஆலோசிக்கப்படுமா? ப:—நான் இதைக்கவனிக்கிறேன்.

## சுவாமிமலை ஆஸ்பத்திரி திறப்புவிழா.

சுவாமிமலையில் தாலூகா போர்டரால் ஸ்ரீமான் N. R. அய்யாவர்கள் பொருளுதவியைக்கொண்டு கட்டப்பட்ட ஆஸ்பத்திரியை கலெக்டர் மிஸ்டர் D. H. போல்டன் I. C. S. அவர்கள் திறந்து வைத்தார் பல கனவான்களும் விஜயஞ்செய்து வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்தகட்டிடத்தை வெகுசீக்கிரத்தில் திறமையாகக்கட்டி முடித்த கண்டிராக்டர் ஸ்ரீமான். N. தக்ஷிணாமூர்த்தி (?) இடங்காபுரத்தார் அவர்களின் (கிராம முன்சிப்) வேலைத்திறமையை ஸ்ரீமான்ராவ்சாஹிப C. R. லெக்ஷ்மிவராகய்யங்கார் அவர்களும் கலெக்டர் அவர்களும் பாராட்டிப்பேசியது பொருத்த முள்ளதேயாகும்

## கிராம சிப்பந்திகள்

குறைத்த கிராம சிப்பந்திகளை மறுபடியும் நியமனம் செய்துவிடும்படி செய்த உத்திரவை சட்டசபையில் இரண்டு அனுமதிபெறுவரையில் நிறுத்திவைக்கும்படி செய்திருக்கிறதாக தெரியவருகிறது.



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

(ஸ்ரீமான், ஊ, சா. வேங்கடராம ஐயர் எழுதியது)

(206-வது பக்கம் தொடர்ச்சி.)

பல அறக்கூழ்ச்சாலைகளும், பொதுமண்டபங்களும், போக்குவரத்துக்குத் துணையாகும் நிழல் தரும் சாலைகளும் பலவாக அமைக்கப்பட்டு நாட்டினர்க்கு நன்மையினைச் செய்யுமாறும் நடத்தி வந்தார்கள்.

இத்துணைச் சிறப்புகளைச் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்த அவர்கள் தங்களுடைய செய்கைகளுக்கு உதவியாகப் பொருளைச் சேகரிப்பதிலும் கைதேர்ந்திருந்தார்கள். நீரிலே கப்பல் மூலமாகவும், நிலத்திலே வண்டிகள் மூலமாகவும் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய பண்ட மாற்றல்களால் வருகின்ற சுங்கப்பொருள்களையும்; வழியற்றவர்கள், அறிவற்றவர்கள் ஆகியவர்களுடைய பொருள்களையும்; குடிகளுடைய நிலவருவாயிலே ஆறில் ஒருபங்கினையும், குறித்த ஒரளவுக்கு மேற்பட்டுக் கிடைக்கும் பூமியின்கீழ் இருந்து எடுக்கப்படும் புதை பொருள்களையும் தங்களுடைய பல பொருள்களாகக் கருதி வந்தார்கள்.

இங்ஙனம் தங்களுக்கென வரையறுத்துக் கொண்ட பொருள்களைக் குடிகளிடமிருந்து வரி என்ற பெயருடன்பல தண்டலாளர்களைக்கொண்டு பெற்று வந்தார்கள். இவ்வாறு வரித்தொகையை வசூல் செய்வதிலே அவர்கள் குடிமக்களுக்கு ஏதும் துன்பம் உண்டாகலாகாது என்பதிலே பெரிதும் கவனம் செலுத்தி வந்தார்கள். எந்த எந்தக்காலத்தில் எப்படி யெப்படிவசூல் செய்வது குடிகளுக்கு நன்மையைச் செய்யும் என்பதை முற்கூட்டிப் பொது ஜனங்களுடன் ஆராய்ந்து கொண்டே வசூல்செய்து வந்தார்கள். 'நிலத்திற்குரியவர்களிடமே வசூல் செய்யவேண்டும்' என்பதில் ஜாக்கிறதை உடையவர்களாதலின் பத்திரப்பதிவு, பட்டாமாறுதல் முதலிய செய்வதில் தவறாதிருந்தார்கள். எக்காரணங்கொண்டும் "ஒருமா நிலத்திலே விளைந்தநெல்லை அறுத்துக்கொணர்ந்து முறைப்படி சேர்த்தால் அஃதொரு யானைக்குப் பலநாள் உணவிற்குப் போதியதாகும். அங்ஙனமின்றி அந்த யானையே நேரிலே வயலிற்சென்று தின்னுமாயின் அதன் வாயால் புகுந்து உணவாவதிலும் காலாற் கெடுவது அதிகமாகும். வண்டி ஓட்டுபவன் நேரானவழியிற்செலுத்தாது தவறான வழியில் வண்டியைச் செலுத்துவானாயின் அந்த வண்டி கெட்டு அழிந்துவிடும்" என்ற உவமைகளை அவர்கள் மறப்பதில்லை. இந்த உவமைகளை உணர்ந்தவர்களாதலின் வரி வசூல்செய்வதில் குடிகள், சிறிதும் கஷ்டப்படாவாறு காத்துவந்தார்கள் தங்களுடைய அரசர் வசூல் செய்யும் வரித்துகைகளை மீட்டும் தங்களுடைய நன்மைகளுக்கே செலவு செய்து வருகின்றனர் என்பதை உணர்ந்த குடிமக்கள் "நீர்நிலைகளிலுள்ள நீர், சூரியகிரணங்களால் இழுக்கப்பட்டு மேகமாக மாறி மீட்டும் பூமியிலுள்ளவர்களுக்கு மழையாகக் கிடைப்பது போலத் தம்மிடமிருந்து அரசனால் வசூல்செய்யப்படும் வரித்தொகைகள் மீட்டும் தங்களுக்கே பலவித சௌகரியங்களாகக் கிடைக்கின்றன" என்ற மகிழ்ச்சியினால் சந்தோஷமாகக்கொடுத்து வந்தார்கள்.

இவ்விதம் தங்களால் ஈட்டப்பட்ட பொருள்களைக் கொண்டு அந்த அரசர்கள் அவற்றைத் தருமம் காரணமாக வறியர் முதலாயினார்க்கும்; பொருள் காரணமாக நால்வகைச் சேனை, பிரிந்தார்ப் பொருத்தல், புணர்ந்தார்ப் பிரித்தல் முதலியவற்றிற்குப்; இன்பங்காரணமாக இளமாக்கா, செய்குன்று முதலியவற்றிற்கும் பகிர்ந்து செலவிட்டு மறுமையிலே வீடு பேற்றிற்கு உரியவர் என்று அனைவரும் வியக்கத்தலையாமாறு இம்மை யின்பங்களாகிய அறம், பொருள், இன்பம் என்ற மூன்று புருடார்த்தங்களையும் குறைவின்றிப் பெற்று இன்புற்று வந்தார்கள். "அரசன்எவ்வழிஅவ்வழி குடி" என்றபடி தமிழர்களும் அங்ஙனம் வாழ்ந்து வந்தார்கள். "கல்வி தறுகண் இசைமை 'கொடைஎனச்— சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" எனத் தொல்காப்பியனார் கூறியது இங்கே பொருத்திக் கொள்ளத்தக்க தாகும்.

முடிவுரை

இக்கட்டுரை ஆசிரியரின் அன்புரிமைக் கடிதத்தைக் கண்டு மறுத்தற்கஞ்சிப் பல இடையூறுகளுக்கும், கவலைக்கும் இடையில் எழுதப்பட்டது. இதில் கூறப்பட வேண்டியன இன்னும் பல இருக்கலாம். கூறிய சிலவும் ஆண்டாண்டு மேற்கோள்களுடன் விரிக்கப் பெற்றிருக்கலாம். மேற்கோள்களையும் கூறிக்கொண்டு போவது கூறியதையே கூறியதாவதுடன் நமது பத்திரிகையைப் படிப்போர்க்குப் பெரும் பயன் தராததாகவும் முடியும் ஆதலின் அம் முறையைக் கைக்கொள்ளவில்லை. ஆனால், இக்கூறிய அனைத்தும் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர்கள் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் நூல்களிலிருக்கும் செய்திகளேயாகும் என்பது உறுதியானது. அவற்றை வேறு வகையில் எழுதியதே இக்கட்டுரையின் வேலை. வன்றி நோக்க இக்கூறிய ஒரு நாட்டினரின் மிக மேலான நிலைமையை அறிவிக்கும் என்பது தவறாகாது. மிக மேலான நிலைமையில் பல நாட்டினரும் விரும்பத்தக்க பொருட்சிறப்பும், செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சியும், அயலவர் அஞ்சும் ஆண்மையும், நம்மவர் விரும்பும் தண்ணளியும், அத்தகையபிறவும் ஒருசேர அமையப் பெற்றிருந்த நமது தமிழகம் உண்டி, உடை, உறையுள் முதலியவற்றிற்கும் வேற்று நாட்டினரை எதிர்பார்க்குமாறு வைக்கப்பட்டிருக்கும் இக்கால இழிந்த நிலைமையினின்றும் விடுபட்டுத் தனது புராதனப்பெருமையை அடையவேண்டுமென்பதே இக்கட்டுரையை எழுதியதன் நோக்கம். அத்துறையில் தமிழகத்துப்பிறந்தார் ஒரு சிலரேனும் முயல இக்கட்டுரை தூண்டிவிடுமாயின் அஃதொன்றே பெரு மகிழ்ச்சியையும், ஊக்கத்தையும் அளிப்பதாகும். இவை அனைத்திற்கும் ஆதாரமான தமிழ்மொழி நமது நாட்டினரிடைத் தனது முன்னைப் பெருமையிலே சிறிதும்குன்றாது பரவிவளர்வதாக. யாண்டும் தமிழ்மணமும், தமிழர்ஒற்றுமையும் வீசி நிலைப்பதாக. தண்டமிழ்வாழ்க. தமிழர் வாழ்க. தாரணிவாழ்க.

எழுமின் தமிழர்காள் எழுமின் எழுமின்
விழிமின் பெருமையை விழைத்தாய் குழைமின்
அறிமின் சிறுமையை அகற்றுமின்
பெறுமின் சுதந்தரம் பெறுமின் பெறுமினே.

# இடும்பாவனம் பிர்மோத்ஸவம்.

புராதன காலம் முதல் பிரசித்திபெற்ற இடும்பாவனம் பாண்டி ரயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கே 4மைல் தூரத்திலுள்ளது. இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மங்களநாயகி ஸமேத ஸ்ரீசத்குண நாதேஸ்வர சுவாமி பிர்மோத்சவம் இவ்வாண்டு வைகாசிமீ 1௳ ஆரம்பிக்கப்பட்டு ஏகதேச டிரஸ்டியும் தஞ்சைஜில்லாவின் உண்மைப்பிரதிநிதியும் பரோபகாரமேபெரிதென மதித்துப் பொதுவிஷயங்களில் விசேஷசிரத்தையுடன் பாடுபட்டு வருபவருமான குன்னியூர் ஸ்ரீமான் கே. எஸ். சிவசுப்பிரமணிய ஐயர் எம்.எல்.சி. அவர்களால் எவ்வருஷத்தையும் விட இவ்வருஷம் மிகச் சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. நூதனமாக கோபுரம் உச்சியிலும் நடவனப் பந்தலிலும் எலக்டிரிக் விளக்குகள் போடப்பட்டு மிகப் பிரகாசித்து விளங்கின. மன்னார்குடி, ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளை சங்கீதமும், சிதம்பரம் ஸ்ரீமான் ஸ்ரீரெங்காச்சாரியாரால் நந்தனார்சரித்திர கதா காலக்ஷேபமும், கும்பகோணம் ஸ்ரீமான் நாகராஜராவ் பில்லாங்குழல்கச்சேரியும் ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிடில்கச்சேரியும் நடந்து வந்திருந்தவர்களை ஆனந்தசாகரத்தில் அழுத்தின. கீரனூர் பிரதர்ஸ் மேளக்சேரியும், திருச்சிணப்பள்ளி ஸ்ரீமான் முத்துகிருஷ்ணன் பாண்டுவாத்தியமும் இனிமையாயிருந்தன. எந்த தானத்திலும் அன்னதானமே மிகச் சிறந்ததென்பதை உணர்ந்த ஸ்ரீமான் ஐயர் அவர்கள் விசேஷ ஏற்பாடுகள் பிராமணர்களுக்குத் தனியாகவும் மற்றவர்களுக்குத் தனியாகவும் இடமமைத்து யாதொருவிதக்குறைவுமன்றி பஞ்சபக்ஷ பரமான்னங்களுடன் போஜனமளித்தார்கள். இந்தக்ஷேத்திரமானது மூவர்களால் பாடப்பெற்றது. இந்த 10 தினங்களிலும் இச் சிற்றூரானது பேரூராகவே விளங்கியது. பதினாயிரக்கணக்கான ஜனங்கள் விஜயம் செய்து ஆனந்தித்து ஈஸ்வர கடாக்ஷத்துக்குப் பாத்திரமானார்கள். காலத்தில் மழை பெய்து குளங்களில் ஜலம் நிறைந்திருந்தது. சமுத்திர சமீபமானதால் நல்லகாற்று வீசிக்கொண்டு கோடையின் தாபம் தெரியாமல் மிக்க வசதியாயிருந்தது. உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாத கனவான்களும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். தெய்வபக்தியில் சிறந்து விளங்கும் ஸ்ரீமான் ஐயர் அவர்களுக்குத் தீர்க்காயுளையும் திடசரீரத்தையும் சகல சம்பத்துகளையும் அளித்தருள வேணுமாய் ஸ்ரீ மங்கள நாயகி சமேத ஸ்ரீ ஸத்குண நாதேஸ்வர ஸ்வாமியைப் பிரார்த்திக்கிறோம்.

223477 600 008



# ஆளுடையார்கோவில் ஆனித்திருமஞ்சன மகோத்ஸவம்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் சேர்ந்த ஆளுடையார் கோவில் என வழங்கும் திருப்பெருந் துறையில் இவ்வருஷம் ஆனித்திருமஞ்சன உத்ஸவம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. மதாரதம் குறித்தகாலத்தில் நிலைவந்து சேர்ந்தது ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு குருந்த மரத்தடியில் உபதேச மளிக்கும் சாக்ஷியின் தெரிசனம் குறிப்பிட்டபடி குருவாரம் ராத்திரி 4¼-மணிக்கு நடைபெற்றது ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் அலங்காரமும் தெரிசனமும் கண்கொள்ளாக்காக்ஷியாயிருந்தது. செட்டி நாட்டிலிருந்தும் பலஇடங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து தெரிசனத்தைக்கண்டு பரவச மடைந்தனர் கூட்டம் ஏராளமாயிருந்தும் யாதொரு விதமான புகாருக் கிடமில்லாமல் ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க தம்பிரான் சுவாமிகள் கவனித்து நடத்திவந்ததையும் காலாகாலத்தில் நடக்கும் படியும் தேகசிரமம் நித்திரை முதலியவைகளை கவனியாது சுவாமிகள் சிரத்தையுடனும் பக்தியுடனும் நடந்து கொண்டதை எல்லோரும் பாராட்டினார்கள் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்கதேசிக மகா சன்னிதானம் பிரதிதினமும் தபால்மூலமாயும் தந்தி மூலமாயும் முறைதவறாது நடத்திவர பக்தியுடன்விசாரித்து கொண்டிருந்தது அவர்கள் கடவுளிடத்து மிக்க அன்புடையார்களென்பதைதெளிவுறக்காட்டியது

இந்த க்ஷேத்திரம் மிக்க வைதீக க்ஷேத்திரமென்பதும் சிவபெருமானுக்குள்ள எல்லாபெருமையும் ஸ்ரீமாணிக்க வாசக பெருமானுக்கே அளித்து தாம் களித்துள்ளாரென்பதும் சிவநேசத் தொண்டர்கள் யாவருமறிவார்கள்.

இம்மகோத்சவம் முறைதவறாது நடத்திவர ஆக்கினை செய்ததோடு ஒவ்வொருதினமும் தந்தி தபால் மூலமறிந்து மிக சிரத்தைபூண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம்அவர்கள் நீடூழிகாலம் திடசரீரியாக இப்புண்ணியத்தை கைக்கொண்டு பெருந் தவசிரேஷ்டராகி இருந்தருள்வார்களென யாவருந் துதிசெய்தார்கள். இம்மகாசன்னிதானம் அவர்கள் பீடத்திலெழுந்தருளிய காலமுதல் இதுகாறும் நற்பெயரடைந்தார்க ளென்பது உண்மை இவர்கள் இச் சோழவளநாட்டிலே சீர்காழிக்கு சமீபத்திலுள்ள சிற்றூரில் ஜனனமாகி ஸ்ரீவேளூரில் கிருத்திகைதோறும் தவறாது ஸ்ரீ முத்துக்குமாரக்கடவுளிடம் அதி பால்யத்தில் தரிசித்து அன்பு பூண்டு அவரது கிருபையினால் அப்பிராயத்தே திருவாவடுதுறைக்குச்சென்று சற்குருவை தரிசித்து காஷாயம்பூண்டு அவ்வாதீனத்து திருக்கூட்டத்தோடு சேர்ந்து சிறு வயதானதால் வைத்திலிங்க குட்டித் தம்பிரானென நாமம்பூண்டு அநேக ஸ்தல யாத்திரைகள் செய்து பின் ஷை ஆதீனம் ஸ்ரீமகா சன்னிதானத்தின் உத்திரவே வேதமாகக்கொண்டு நடந்தமையைக்கண்டு அவர்களது பக்தி புத்திக்கு மெச்சி ஞான தீக்ஷை உடையவர் பூஜை முதலியதுங் கொடுத்து ஆதீனத்துக்கு முக்கிய நிர்வாகமாகியதெக்ஷணாங்கார் பாறு என்னும் பெரிய ஸ்தானத்தை கவனித்து ஏற்படுத்தி நரவாகனமாகிய பல்லக்கு முதலிய உயர்வான அங்கங்களைப்பெற்று சுமார் 30.வருட காலம் அப்பதவியிலிருந்து குருவாக்கின் பரிபாலனத்தை யடைந்து அதின் பயனாக அவ்வாதீனத்தின் தலைமையாகிய சைவசித்தாந்த குருபீடத்தில் சென்ற துந்துபிவருடமுதல் எழுந்தருளி யிருக்கின்றார்கள். இவர்கள் வயதில் முதிர்ந்தவர்களான போதிலும் தினமும் முக்காலமும் ஸ்நானமும் ஜெபதபங்களும் பூஜைகளிலும் இதுகாறுந்தவறாது செய்துவருகிறார்கள். வைதீகத்திற்கு பெரும் ஒளியாக விளங்கிவருகிறார்கள். இன்னும் இவர்களது பெருமை அடுத்தசஞ்சிகையில் வெளிவரும்.

## கிராம பஞ்சாயத்துகளும் கிராம கோர்ட்டுகளும்.

[சேங்காலிபுரம், ஸ்ரீமான் V. பஞ்சாபகேச அய்யர் எழுதுகிறார்.]

இப்போது கிராமங்களில் நிர்வாக வேலைகளுக்கென்று கிராம பஞ்சாயத்துச் சபைகளும் நீதி வியவகாரங்களைத் தீர்ப்பதற்கென்று கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளும் தனித்தனியாயிருக்கின்றன. லோகல் போர்டு சட்டத்தில் சில மாறுதல் செய்யவிருக்கும் இச்சமயத்தில் பஞ்சாயத்துச் சபைகளையும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளையும் ஒன்றாக்கிவிட வேண்டுமென்று சில பஞ்சாயத்து நிர்வாகிகள் யோசனை கூறி வருகிறார்கள். பஞ்சாயத்துச் சபைகளின் நன்மையை மட்டும் கவனிக்குமளவில் இந்தயோசனை நன்மையாகவிருக்கலாம். ஆனால் எல்லாஜனங்களுக்கும் பொதுவான நீதி வியவகார விஷயங்களில் இது நியாயமாயிருக்குமாவென்பதை யோசிக்க வேண்டியிருக்கிறது. கிராம பஞ்சாயத்துச் சபைகளை இப்போது கலெக்டர்களுக்கு மாற்றியதிலிருந்து கவர்மெண்டாரும் இம்மாதிரி ஒன்று சேர்த்துவிடும் நோக்கத்துடன் தான் ஆரம்பித்திருக்கிறார்களோவென்றும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது

நீதி நிர்வாக இலாகாக்கள் ஒன்றாயிருப்பதால் அநீதி விளைகிறதென்றும், அவைகளைப் பிரித்துவிட வேண்டுமென்றும் வெகுகாலமாய்ப் புகார் செய்துகொண்டு வந்திருக்கிறோம். காங்கிரஸ் ஏற்பட்டதுமுதல் இந்தத் தீர்மானம் பிரதி வருஷமும் செய்யப்பட்டு வந்திருக்கிறது. கவர்ன்மெண்டார் அவ்வேண்டுகோளை இன்னும் நிறைவேற்றி வைக்கவில்லையென்று அவர்கள் மீது குறை கூறிக்கொண்டிருக்கிறோம். இந்நிலைமையில் சுயஆக்ஷிக்கு அடிப்படையான கிராமங்களில் வெவ்வேறாகவிருக்கும் நீதி நிர்வாக வேலைகளை ஒன்றாக்கிவிட வேண்டுமென்று சொல்வது சரியாகாது.

அநுபவபூர்வமாகப் பார்ப்போமாயினும் இரண்டையும் ஒன்றாக்குவது சரியாகத்தோன்றவில்லை. இப்போதைய பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் சிலமாறுதல் செய்தாலன்றி, அவைகள் எதிர்பார்க்கும் பிரயோஜனத்தைக் கொடா. பஞ்சாயத்துக்கோர்ட்டுத் தீர்ப்புகளை அமுலுக்குக் கொண்டுவரத் தற்போது வசதியில்லை. எழுத்தில் மாத்திரம் விதிகளிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒருபஞ்சாயத்துக் கோர்ட்டு இருப்பது கூடாது. கிராமத்திலுள்ள கக்ஷிப் பிரதி கக்ஷிகளை இவ்வேற்பாடு வளர்க்கவிடுவதேயாகும். சில கிராமங்களைத் தொகுப்பாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் பிரதிநிதிகளைப் பொருக்கிக்கோர்ட்டுகளை ஸ்தாபித்து எழுத்து வேலைகளைச் செய்யவும் உத்திரவுகளை நிறைவேற்றவும் சிப்பந்திகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய செலவுக்கு வியாஜ்ஜியங்களுக்கு ஒரு விகிதத்தை ஏற்படுத்தி வசூல் செய்துகொள்ளலாம். இப்பேதையக்கலைமைப்படி (free litigation) என்னும் வியாஜ்ஜிய முறை விரும்பத் தகுந்ததல்ல. அதை இலகுவான மலிந்த வியாஜ்ஜிய முறையாகச் செய்வதுதான் உசிதம். பஞ்சாயத்துக் கோர்ட்டுகளைப்போலல்லாமல் பஞ்சாயத்துச்சபைகள் பிரதி கிராமத்துக்கும் தனித்தனியாயிருப்பதுதான் உசிதம். பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் யூனியன் போர்டுகள் மாதிரி கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுவதும் தீபங்கள் முதலிடன போடுவதுமேயாகும். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களில் பெரும்பான்மை நிலத்துக்குடையோர்களின் பொதுக் காரியங்களைக் கவனிப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இவ்வளவுமட்டில் சிலாக்கியந்தான். இக்கடமைகளையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இன்னும் எவ்வளவு வசதிகளைச் செய்துகொடுத்தாலும் அது கிராமங்களின் நிலைமைக்கு அத்தியாவசியமாகும். இம்மாதிரிக் காரியங்களில் அக்கறையுடையவர்கள் கிராமங்களில் நிலம் உடையவர்களேயாவர். பஞ்சாயத்துக் கோர்ட்டுகளிலோ எல்லா மனிதர்களும் கவலையுடையவர்கள்.

இப்போது சொல்லப்படுவதுபோல் சில வருஷங்களுக்கு முன்னும் இரண்டு பஞ்சாயத்துக்களையும் ஒன்றாக்கி விடவேண்டுமென்று ரெஜிஸ்டிரார் ஜெனரல் ஸ்ரீமான் கோபாலசாமி அய்யங்கார் அவர்களாலேயே ஒரு மசோதா சட்ட சபைக்குக் கொண்டுவரப்பட்டுப் பிரசுரமும் செய்யப்பட்டது. அக்காலத்தில் அவரை நான் சந்திக்கநேரிட்டபோது இவ்விஷயங்களையெல்லாம் தெரிவித்தேன். பிறகு எக்காரணத்தாலோ அச்சட்டம் வரவில்லை ஆகையால் இப்போது ஒன்றாக்கிவிட வேண்டுமென்று விரும்புகிறவர்கள் எல்லாவற்றையும் நிர ஆலோசித்தப்பின்ஒருசமயம் பிரித்துவிட வேண்டுமென்று மன்றாடும்படி நேராமல் செய்து கொள்ளுவார்களென்று நம்புகிறேன்.



# ஆரம்பக்கல்வி.

## விருத்தி யின்மைக்குக் காரணம்.

ஸ்ரீமான் P. பரிமண பல்லவராயர், ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல், திருவெறும்பூர்.

ஆரம்பப்பாடசாலைகளே கல்விக்கு அஸ்திவாரமென்பது யாவரும் அறிந்தது. ஆரம்பப்படிப்புப்பலமானதாய் நன்கு போதிக்கப்பெற்றதாயிருந்தாலே மேற்படிப்பு படித்ததாலானபயனும் பலனுள்ளதாயிருக்க ஏதுவாகும். இதற்கு ஆரம்ப ஆசிரியரும் அனுகூலமாயிருத்தல் அத்தியாவசியமென்பதை அறிவிக்க வேண்டியதில்லை அஸ்திவாரம் நல்லதாயமைக்கப்பட்டாலே மேற்சுவர்கள்—கட்டடம் பலமுள்ளதாய்—நெடுநாளைக்கு இருக்கக் கூடியதாய்—பிரயோஜனப்படக்கூடியதாயிருக்குமெனபதையும் எவரும் அறிந்தது. ஆரம்ப ஆசிரியர் அநுகூலமாயிருத்தற்கு அவர்களது நிலைமை—வருமானம் சரியானதாய் காலக்ஷேபத்திற்குப் போதுமானதாயிருத்தல் வேண்டுமென்பது எவரும் மறக்கொண்ணாதது. காலநிலைமையில் போதுமான சம்பளமில்லாதவர்கள் எஞ்சிய பொருளுக்கு வேறு வருவாயையும் எதிர்பார்க்க வேண்டியதே. வேண்டிநேருவதே இயற்கையல்லவா! இதனால் இவர்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்குத்தகுந்தபடி தமது முக்கிய தொழிலைப் பூரணமாய்க் கவனித்தற்கும் இடமில்லாது போகநேரிடுவது ஆச்சரியமோ? கல்வியின் விருத்தி அதன் ஆசிரியர்களின் நிலைமைக்குத் தகுந்தபடிதான் ஏற்படக்கூடுமா?—எதிர்பார்க்கக்கூடுமா?—இயலுமா?

இக்காலத்தில் கல்வி விருத்தியின் குறைவுக்குக் காரணர் லோயர்கிரேடு ஆசிரியர்களே யென்றும், இனி லோயர்கிரேடு ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளல் கூடாதென்றும் ஏற்பாடுசெய்து வருகின்றனர். ஏற்கனவேயுள்ளவர்கள் இந்த லோயர்கிரேடு ஆசிரியர்கள் இச்சர்க்காரால் ஏற்படுத்தியுள்ள—தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள—பயிற்சிசெய்விக்கப்பெற்றுள்ள லோயர்கிரேடு ஆசிரியர்கள்தானே இவர்களால் கல்வி விருத்தி குறைந்துவிட்டதெனின், இவர்களை தேர்ந்தெடுத்தவர்களும் கல்விக்குறைவிற்குக் காரணர்களல்லவா? கல்விக்கமிட்டியார் தற்கால காலக்ஷேபத்திற்குக்குறைந்தது 30 ரூ வேண்டுமென்றும், கவர்மெண்டார் 22½ ரூபாயிலிருந்தாவது தற்காலம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தும், ஜில்லாக் கல்வி அதிகாரிகள்போன்றோர் தாங்கள் 600, 700-ரூபா சம்பளத்திற்கும் படிக்ரம், ஆசைப்படுவது ஒருபுறமிருக்க, மேலேகுறிப்பிட்டவாறு ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திக்கு ஆரம்ப ஆசிரியர்களே காரணர் என்றபடி, ஆரம்ப ஆசிரியர்களுக்கு மேலே குறிப்பிட்டதற்கும் குறைந்து ரூ 20, 22, கொடுப்பதற்கும் பொறுமைப்பட்டு நாங்கள் (கவர்ன்மெண்டில், உங்களுக்கு (ஸ்தலஸ்தாபனங்களுக்கு) க்கொடுக்கும் கிராண்டுதிட்டம் குறைந்ததுதானே? நீங்கள் ஏன் இவ்வளவு அதிகமாய்க் கொடுக்கிறீர்களென்று கேட்பாராயின் அவரது நோக்கம் கல்வி அபிவிருத்தியா? தமது சுயாலவருவாய் நோக்கமா? இப்படிப்பட்டவர்களால்தானே கல்வி அபிவிருத்தியாவது ஆரம்ப ஆசிரியர்களால்தானே—அதிலும் லோயர்கிரேடு ஆசிரியர்களால்தானே ஆரம்பக்கல்வி அபிவிருத்தியடையவில்லையென்பதைச் சிந்தித்துப்பாருங்கள். பழி. பழி. வீண்பழி.

இதுபோது இருக்கும் லோயர்கிரேடு ஆசிரியர்களில் முன்னைய 4-வதும் தற்போது 5-வது வகுப்பும் படித்தவர்களும்—இதற்கும் குறைந்த படிப்பு படித்தவர்களும் இருக்கிறார்களல்லவா? இவர்களிலும் கெட்டிக்காரர்கள் இல்லாமலில்லை. ஹையர்கிரேடுடன் சமமாய் ஒரே பரீக்ஷையில்தேர்ந்த லோயர்கிரேடினர் இருப்பதுபோல் லோயர்கிரேடினருக்குச்சமமானவர்கள் செகண்டரி ஸ்கூலில் படித்தவர்களிலும் இல்லாமலில்லை. ஆனால் சொற்பமே பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்கள் போதவில்லையென்று செகண்டரி ஸ்கூலெனச்சில ஆங்காங்கு முன்னம் ஏற்படுத்தி குறிப்பிட்ட குறைந்த படிப்புள்ளவர்களை 4, 5, வகுப்புகள் படித்தவர்களுக்குச் சமமாகப் பயிற்றுவித்து வெளியேற்றினவர்கள்தானே இவர்கள் என்னதான் பயிற்றினாலும் இளமைக்கல்விக்கீடாகுமா? விளையும் பயிர் முளையிலேயன்றோ தெரியும். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டுமன்றோ! இப்படிப்பட்டவர்

களையும் இந்த சர்க்கார் தேர்ந்தெடுத்ததினாலும் தானே இப்போதைய நிலைமை ஏற்படலாயிற்று. இதனையல்லா—பழைய 4-வது, புதிய 5-வது பயின்று பரீட்சாதிகாரிகளாலேயே—இளமையிலேயே யோக்கியதா பத்திரம் பெற்றவர்களையும் சேர்த்து தூற்றுவது அடுக்குமா? கல்வி விருத்தியாகவில்லை என்றால், எல்லா லோயர்கிரேடினருமா காரணர்-பொருப்பாளிகள்—பழியாளர்கள் தெய்வத்துக்கும் கண்ணில்லை என்னும் கிராமாந்திரப்பழமொழி உண்மையாகப்போய் விடக்கூடுமோவென அஞ்சுகிறோம்.

ஆகவே, கல்வியை விருத்தி செய்கிறோமென்பவர்கள் இதனைக்கவனித்து தத்தம் ஏற்பாடுகளை—முயற்சிகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

# அன்னதான பலன்.

(126-வது பக்கம் தொடர்ச்சி.)

வேடன் தூக்கத்தில்புரண்டு கீழே விழுந்துவிட்டான் ஒருமிருகம் அவனைக்கொன்று தின்றுவிட்டது. சூரியோதயமானவுடன் பையன் எழுந்துபார்த்தான். வேடனைக் காணவில்லை. வேடன் மனைவியால் வேடன் இறந்துவிட்ட சமாசாரத்தைஅறிந்துகொண்டு தனக்கு உபகாரம் செய்தவனுக்கு இக்கதி ஏற்பட்டதேயென்று மனவருத்தத்துடன் வழிநடந்து காடு, மலை, வனாந்திரங்களெல்லாம் கடந்து ஒருவூர் வந்துசேர்ந்தான். அவ்வூரில் ஒரு பிராமணன், அவனுக்கு ஏராளமான பூஸ்திதி உண்டு, ஒரு நாளைக்கு ஆயிரம் கலம் தானியம் கிடைக்கும். அவ்வளவும் அவ்வூர் ஏரி மராமத்துக்கே சரியாய் விடுகிறது. ஏனென்றால் தினமானம் அவ்வேரி மராமத்து செய்வதும் உதயமானால் மறுபடி ஏரி உடைத்துக்கொள்ளுவதுமாயிருந்தது. அதனால் ஆட்களும் தான்யங்களும் செலவாகி விடுகிறது, அந்த பிராமணன் பையனைப்பார்த்து நீயார்? எங்கிருக்கிறது? என்ன காரியமாய் வந்தாய்? எங்கு செல்லுகிறாய்? என்று வினவ தன் வரலாற்றைச் சொல்லி அன்னதானப்பலனை பரமசிவனாலறிந்து கொள்ளப் போகிறேனென்று கூறக்கேட்டு மகிழ்ந்து பிராமணன், பையனுக்கு நல்ல விருந்தளித்து உபசரித்து பரமசிவனைக்கண்டு உன்குறை தீரவேறினபின்பு, என் ஊர் ஏரி தினம் உடைத்துக்கொண்டு போகிறதின் காரணத்தையும் அறிந்துவரவேண்டுமென்று வேண்ட பையன் அதற்கிசைந்து விடை பெற்றுக்கொண்டு அவ்வூரைவிட்டு காட்டிற்குள் செல்லுகையில் வழியில் ஒரு முடவன் கைகாலில்லாதவனாய்ப் பசியால் மிகவருத்தமடைந்து பையனை நோக்கி எங்கு செல்கின்றீர் என்று வினவ, அன்னதானப் பலனை யறிய பரமசிவனிடம் செல்லுகிறேனென்று கூற, ஐயா நான் பசியால் வெய்யிலிற்பட்ட புழுபோல வருந்துகிறதற்குக் காரணமென்னவென்று பரமசிவனைக்கேட்டு தெரிந்துவரவேண்டுமென்று வேண்ட அதற்கிசைந்து விடைபெற்றுக்கொண்டு சிறிதுதூரம் செல்ல அங்கு ஒரு நாகம் புற்றினின்றுவெளிவர சக்தியில்லாமலும் கண் தெரியாமலும் பசியினாலும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருந்தது. பையனைக்கண்டு ஓ ஐயா, நீர் எங்கு செல்லுகின்றீரென்று வினவ, பையன் அன்னதானப் பலனை அறிய பரமசிவனைக் காணப் போகிறேனென்று கூற நாகம், எனக்கு கண்தெரியவில்லை பசியோ ஜாஸ்தியாயிருக்கிறது. இரையின்பேரிலோ விருப்பமில்லாமலிருக்கிறது. புற்றைவிட்டு வெளியில்வரக் கூடவில்லை அதன் காரணத்தையும் கேட்டு வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டது. அதற்கிசைந்து விடை பெற்றுக்கொண்டு சிறிதுதூரம் சென்றான். அங்கு ஒரு மாமரம் குலுங்கப் பழுத்து ஒருவருக்கும் உதவியில்லாமலிருப்பதையும் தன்னிடத்தில் பறவை, விலங்கு, மனிதர், ஒருவருமணுகாதிருப்பதையும் கண்டு மனவருத்தமடைந்து பையனைப் பார்த்து எங்கு செல்கின்றீர் என்றுவினவ பையன் தன் கருத்தை உரைக்க, மாமரம் தன் வருத்தத்தைத் தெரிவித்து அதற்குக்காரணத்தை தெரிந்துகொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதையும் கேட்டுக் கொண்டு சிறிதுதூரம் சென்றான். அங்கு தோன்றிய ஒரு பெரிய மலையைக்கண்டு இதுதான் தகுதியானதென்று கருதி அங்கு ஐம்புலன்களையும் அடக்கி கடுந்தவம் புரிந்தான். இப்படி ஒரு வருஷம் செல்லவே தபோக்னியானது கைலயங்கிரியை அணுகிற்று. பரமசிவன் உடனே பார்வதி சமேதராய் ரிஷபாரூடராய் பையன் முன் பிரத்யக்ஷமானார். பையன் கண்விழித்து பார்த்து ஆனந்தக்கூத்தாடி பலவாறு துதித்தான். பரமசிவன் உன் தவத்துக்கு மகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் தருகிறோமென்றனர். பிராமணப்





பையன் பேரானந்தமடைந்து சுவாமி சகல பாக்கியங்களும் தங்கள் தரிசனம் கிடைத்தவுடன் பெற்றேன். அன்னதான பலனையறிய விரும்புகிறேன், கிருபை பாலிக்க வேண்டுமென்று வேண்டினான். பரமசிவன் சந்தோஷமடைந்தவராய் அன்னதானப்பலனை யறிய வேண்டிய கருத்துனக்கிருக்கின்றபடியால் சொல்லுகின்றேன் கேள். விலாடதேசத்துக்கதிபதியாகிய அரசனுக்கு புத்திரனில்லை அவன் பிராமணர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அவர்களால் அட்சதையும் திருநீறும் தன் மனைவிக்குக் கொடுத்து வருகிறான். அதனால் புத்திரன் உண்டாகமாட்டாது. நான் கொடுக்கிற இந்த அட்சதையையும் திருநீறையும் கொண்டுபோய்க்கொடு இவற்றால் புத்திரனுண்டாகும். அப்புத்திரனை பூமியிற்படாமல் நீ அங்கிருந்து ஈனுதவாழைக்குருத்தை ஒரு பொற்றட்டில் போட்டு அதில் புத்திரனை ஏந்தி அன்னதானப்பலனைக் கேள். அந்த சிசு சொல்லும் என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்னும் பையன் சுவாமியை வணங்கி, நான் வரும்வழியில் ஓர் பிராமணன் ஏரி தினந்தோறும் உடைத்துக்கொண்டு போகிறதற்கும், ஒரு முடவன் காலில்லாமல் தவிக்கிறான் அவனுக்கவ்வளவு வருத்தம் வந்ததற்கும், ஒருநாகம் கண்தெரியாமல் இருப்பிடத்தை விட்டு அசையமுடியாமலும் இரையின்மேல் விருப்பமில்லாமலிருப்பதற்கும், ஒருமாமரம் குலுங்கப்பழுத்தும் பிறருக்கு பயன்படாமலிருப்பதற்கும் காரணங்களை விளங்க உரைக்க வேண்டுமென்று வினவ, பரமசிவன் சொல்லுகிறார்.

பிராமணன் ஏரி தினந்தோறும் உடைத்துக்கொள்வதற்குக் காரணம் அவன் வீட்டிலிரண்டுபெண்கள் பருவகாலமடைந்தும் அவர்களுக்கு மணம் புரிவிக்காமலிருக்கின்றமையால் அந்த ஏரி உடைத்துக்கொண்டு வருத்தத்தைக் கொடுக்கிறதென்றும் அக்கன்னிகைகளுக்கு மணம் புரிவித்தால் ஏரி உடையாது. முடவன் தான் கற்ற வித்தையை பிறருக்கு கலக்கமில்லாமற் சொல்லாமையால் அவ்வளவுவருத்தமுண்டாயிற்றென்றும் அவன் கற்றவித்தையை ஒளியாமல் ஒருவருக்குச்சொல்வானாகில் அவனுடைய வருத்தம் நீங்கும். நாகத்துக்கு தலையில் மாணிக்கமிருக்கின்றபடியால் வருந்துகின்றது. அதுமாணிக்கத்தை யாருக்காவது கொடுத்துவிட்டால் அதன் வருத்தம் நீங்கும். மாமரத்தடியில் ஏழுஜாடி தனமிருக்கின்றபடியால் அதை பூதங்கள் காத்துக்கொண்டிருக்கின்றது அதனால் ஒரு ஜெந்துவும் வராமலிருக்கின்றது. மாமரம் தன்னிடத்திலிருக்கிற ஏழு ஜாடி திரவியங்களை யாருக்காவது கொடுத்துவிடுமாகில் அம்மாங்கனி பிறருக்குபயோகமாகும் என்று கூறினார். பையன் மறுபடி வணங்கி ஓ சுவாமி அடியேன் வரும்போது ஒரு வேடன் எனக்கு இடம் கொடுத்து உணவளித்தான். அவன் மிருகத்துக்கு இரையான வரலாறு கூறவேண்டுமென்று வினவ பகவான், அப்பா அந்த வேடன் வரலாறு விலாடதேசத்தரசனுக்குப் பிறக்கிற பிள்ளையால் விளங்குமென்று விடைகொடுத்து அந்தர்த்தியானமாயினார். பையன் அங்கிருந்து விட்டெழுந்து சுவாமியைவணங்கி பின் நடக்கலானான். மாமரத்தடியில் வந்து ஓ மாமரமே உன்னிடத்தில் ஏழு ஜாடி திரவியமிருக்கிறதென்றும் அதைப்பிறருக்கு கொடுத்துவிட்டால் உன்கனி எல்லோருக்கும் உபயோகப்படுமெனப் பரமன் கூறினாரென, அம்மாமரம் ஓ பிராமணோத்தமரே! என்னிடத்திலிருக்கிற திரவியத்தை பரமனால் கண்டு தெரிந்த உமக்கே கொடுத்து விட்டேன். நீரெடுத்துக் கொள்ளுமென்று சொல்ல பையன் மறுபடியும் வந்தெடுத்துக்கொண்டு போகிற பரியந்தம் உன்னிடத்திலிருக்கட்டுமென்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு. நாகத்தினிடத்தில் வந்து ஓ நாகமே, உன் தலையில் மாணிக்கமிருக்கிறதென்றும் அதை யாருக்காவது கொடுத்துவிட்டால் உன் வருத்தம் நீங்குமென பரமன் கூறினாரென், நாகம் பரமனாலறிந்த நீரே பெற்றுக்கொள்ளுமென நாகரத்தினத்தைக் கக்கி பிராமணன் கையில் கொடுத்து வருத்தம் நீங்கிற்று. பையன் வாங்கிக்கொண்டு முடவனிடம் வந்து நீர் கற்ற கல்வியை பிறருக்குரைக்காமல் ஒளித்ததினாலுமக்கு வருத்தமுண்டாகியிருக்கிறதென பரமன் கூறினாரென, முடவன் என்னுள்ளக்கருத்தைப் பரமனாலறிந்த உமக்கே கற்பிக்கிறேன் வாருமென்றழைத்து, தான்கற்றவித்தையெல்லாம் கற்பித்து பஞ்சாக்ஷரத்தையும் நாவிலெழுதி தன் வருத்தம் நீங்கினன். பையன் முதலில் கண்ட பிராமணனிடம் வந்து ஐயா, நீர் இரண்டு பெண்களுக்கு ருதுவாகியும் இன்னும் கல்யாணம் செய்யாமலிருக்கின்றீராம், அதனால் உமதுஏரி உடைத்துக்கொள்ளுகிறதென்றும், அக்கன்னிகைகளை யாருக்காவது விவாகம் செய்து கொடுத்துவிட்டால்ஏரிஉடையாதென்றும் உமதுவருத்தம் நீங்குமென்றும் பரமன்கூறினாரெனக்கேட்ட பிராமணர் மகிழ்ந்து உடனே தன்னிருபெண்களையும் அந்தப்பையனுக்கே விவாகம் செய்து கொடுத்து தன்வருத்தம் நீங்கி சந்தோஷமடையலானார். பையன் சிலநாளங்கிருந்து ஓர்நாள்மாமனாரைநோக்கிமறுபடிவந்துமனைவிகளை அழைத்துப்போகிறேனென்றுகூறி விடைபெற்றுக்கொண்டு விலாடதேசம்வந்து அரசனைக்கண்டு ஓ மகாராஜனே, என் கையினால்அட்சதையும் திருநீறும் கொடுப்பேனாகில்உமக்குப் புத்திரனுண்டாகிறான். அப்படி புத்திரனுண்டாகா

மற்போனால் என் பிராணனை விடுகிறேன் என்று சபதம் கூறி ராஜனுத்திரவுபெற்று ராஜபத்தினியை ஸ்நானம் செய்து நவவஸ்திரத்தோடு வரும்படி செய்து அட்சதையும் திருநீறும் கொடுத்தான். ராஜபத்தினி கர்ப்பவதியானாள். அரசன் மகிழ்ந்து பிராமணப்பையனை உபசரித்து மகிழ்ந்தான். பிரசவகாலம் வந்தது. பையன் அரசனை நோக்கி ஓ மஹாராஜனே உமக்குப் பிறக்கிற புத்திரன் மகாமண்டலேஸ்வரனாயிருப்பான். அவனோடு நான் பேசவேண்டியிருப்பதால், அப்புத்திரன் பூமியிற் படாமலிருக்க ஒரு பொற்றட்டு செய்து அதில் வாழைக் குருத்தை வைத்து அதில் புத்திரனை ஏந்தி வரவேண்டுமென்று சொல்ல, அரசனும் அவ்வாறே கட்டளையிட்டு ராஜாக்களை வரும்படி திருமுகம் அனுப்பினன். ராஜாக்களும் திருமுகங்கண்டு வந்து சேர்ந்தனர். மருத்துவச்சிகள் புத்திரனை பூமியிற்படாமற் பொற்றட்டிலேந்தி ராஜசமூகத்திற்கு கொண்டு வந்தார்கள். பிராமணப்பையன் அப்புத்திரனை நோக்கி அப்பா, ராஜபுத்திரா! அன்னதான பலனை உரைக்கவேண்டுமென்று கேட்க, அன்னதானப்பலன் என்னால் உரைக்கத்தக்கதல்லவாயினும் அனுபவம் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். முன் ஜென்மத்தில் நான் ஒரு வேடன். ஒருநாள் ராத்திரி தேனிலும் தினைமாவிலும் கொஞ்சமற்று உமக்கு கொடுத்தேன். அதனால் வேடரூபம் நீங்கி உலகாதிபதியானேன். இதனால் அன்னதானபலனை நீரே மதித்துக்கொள்ளும். என்மனைவி உமக்கு இடமும், தேனும், தினைமாவும், கொடுத்தேன் என்றானே அவன் இந்த ஊர் பறச்சேரி வெட்டியான் வீட்டில் இருக்கும் பன்றி போட்ட குட்டிகளில் நாலாவது குட்டியாக பிறந்திருக்கிறான். அதற்கடையாளம் கால் வெள்ளை நடுநெற்றி சுக்கனிருக்கும் பார்த்துக்கொள்ளுமென்று கூறி வாயை மூடிக்கொண்டது. விலாடதேசத்தரசனும் மற்றரசர்களும் கேட்டு ஆச்சரியப்பட்டு பிராமணப்பையனை யாவரும் வணங்கி மற்ற வரலாறுகள் பூராவும் கேட்டுத்தெரிந்து கொண்டனர். பையன் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு மாமரத்தருகில் வந்து திரவியத்தை எடுத்துக்கொண்டு இரண்டு மனைவிகளையும் அழைத்துக்கொண்டு தன் தாயாரிடம் வந்து வணங்கி தான் போய்வந்த வரலாறுகளை ஆதியோடந்தமாகக்கூறி அன்னதானபலனின் மகிமையை உலகமறியச்செய்து விசேஷ அன்னதானம் செய்துகொண்டு சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

## நன்னிலம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் மிமோரியல்.

ஜமாபந்தி காலத்தில் கலெக்டர் துவாரமாக கவர்ன்மெண்டாருக்கு நன்னிலம் தாலூகா கி. உ.க்கள் அனுப்பிய மிமோரியலின் சாராம்சம்:—

கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளம் மிகக் குறைவாகவும் போதாததாகவு மிருக்கிறது அவர்களுக்குள்ள ஜவாப்தாரித்துவத்துக்கும், ஏராள வேலைகளுக்கும் கொஞ்சமேனும் கட்டாததாக இருக்கிறது. இதர டிபார்ட்டுமெண்டுகளில் சிப்பந்திகளுள்பட சம்பளங்களை உயர்த்திவிட்டு கிராம உத்தியோகஸ்தர்களை மாத்திரம் புறக்கணித்து விட்டார்கள்.

1927 வரு மார்ச்சு மாதத்தில் சென்னை சட்டசபையில் 15 ரூபாயாகச் செய்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டதை கவர்ன்மென்டார் இன்னம் அமுலுக்கு கொண்டுவரவில்லை.

ஜமாபந்தி படியென்று 10 ரூ கொடுத்துவந்து நிறுத்திவிட்டதை மறுபடி கொடுக்கவேண்டுமென்றும் ஜமாபந்திகாலத்தில் அதிகநாள் ஹெட்குவார்ட்டரில் தங்கி அதிகச்செலவு செய்யவேண்டியிருக்கிறதென்றும் இது கிராம உத்தியோகஸ்தர்களின் பொருளாதார நிலைமையில் மிகவும் கஷ்டத்தை உண்டாக்கிவிட்டதென்றும் உடனே படியைக் கொடுக்கும்படி உத்தரவாகவேண்டுமென்றும் மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்,

இந்த கஷ்டமானநிலைமையிலிருந்து நிவர்த்திக்க வேண்டி உடனே சம்பளம் 15 ரூபாயையாவது கொடுக்கும்படியும் ஜமாபந்தி படியை நிறுத்திய 1926 வரு முதல் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை பிரார்த்திக்கிறார்கள்.



## தஞ்சை ஜில்லா கலெக்டர் D. H. போல்டன் Esq, I, C S. அவர்களுக்கு நன்னிலம்தாலூகா கி. உ. சங்கத்தார் வாசித்துக்கொடுத்த வரவேற்புப்பத்திரம்.

கனம்தங்கிய ஐயா!

நன்னிலம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள் எங்கள் மத்தியில் தங்களை முழு மனதுடன் வரவேற்கின்றோம்.

ஐயா!

எங்களுடைய அதிர்ஷ்டவசமாக, நற்குணம், நற்செய்கை, தயாளகுணம், வாய்ந்த தாங்கள் வந்து எங்கள் தற்கால நிலைமையை சீர்திருத்தம் செய்வீர்கள் என்று முழுமனதுடன் நினைக்கிறோம்.

ஐயா!

கிராம உத்தியோகஸ்தர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேலைகளில் அடிக்கடி சம்பந்தப்பட்டுக் கொண்டு இருந்தும், அரசாங்கத்திற்கு அவசியமானவர்களாக இருந்துங்கூட எங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவாகவும், சரியானபடி நடத்தப்படாமலுமே இருப்பது யாவரும் உணர்ந்த விஷயமாகும். மற்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் சம்பளம் அதிகப்படியாக போட்டு கிராம உத்தியோகஸ்தர்களாகிய எங்களுக்கு அதுமாதிரியான நன்மை யாதொன்றும் செய்யப்படாதிருப்பதற்கு காரணம் தெரியவில்லை. நாங்கள் செய்யும்வேலை அவர்கள் செய்யும்வேலையைவிட எவ்விதத்திலும் குறைவுள்ளதல்ல.

ஐயா!

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அஸ்திவாரம் போன்ற எங்களுக்கு வேண்டிய உதவிகளைப்புரிவீர்கள் என்று நினைக்கிறோம்.

ஐயா!

தங்கள் வாழ்நாளும், உடல்நலமும், உயர்ந்த பெருமையும், நாளும், வளர்ந்தோங்குக என்று மன, மொழி, மெய்களால் எம்முழுமுதற்கடவுளை வேண்டி வணங்குகின்றோம்.

(கிராம உத்தியோகஸ்தர்கள், நன்னிலம்தாலூகா.)

## விளம்பரம்.

த. ச. சுப்பராயலுசெட்டி & பிரதர்ஸ்,
ஜவுளி, பித்தளை, வெள்ளி பாத்திரங்கள்,
ஷராப் வியாபாரம், மன்னார்குடி

## மன்னார்குடி தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் மிமோரியல்

மன்னார்குடி தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் கலெக்டர் துவாரமாக கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிக்கொண்ட மிமோரியலின் சாராம்சம்:—

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுது கொடுத்துவரு மாதச்சம்பளமானது அவர்கள்பார்க்கும் ஏராளமான வேலைக்கும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் முக்கியமான கடமைகளுக்கும் ஜவாப்தாரித்தவத்திற்கும் கொஞ்சமேனும் போதாததாகயிருக்கிறது. இதரடிபார்ட்மெண்டுகளில் கீழ்த்தர சிப்பந்திகளுக்குக்கூட சம்பளத்தை உயர்த்தி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கே அஸ்திவாரம் போன்ற இன்றியமையாத கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்தை உயர்த்தாமலிருப்பது கொஞ்சமேனும் நியாயத்திற்காவது, தர்மத்திற்காவது ஒத்ததாகவில்லை அவர்கள் செய்யும் வேலை மற்றவர்களைவிட எந்தவிதத்திலும் தாழ்ந்ததல்ல. கர்ணங்களுக்கு 30 ரூபாய்க்கும், கிராமமுன்சிப்களுக்கு 20 ரூபாய்க்கும், சிப்பந்திகளுக்கு 10-ரூபாய்க்கும், குறைந்து கொடுப்பது அவர்களுடையசெலவுக்கு கொஞ்சமேனும் போதாதென்றும், சற்றும் நியாயமாகாதென்றும், அவர்கள் தயவுடன் நடத்தப்படவில்லையென்பதை நன்றாக காட்டுகிறதென்றும் அவர்களுடைய பாத்தியதையையும் மற்ற டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களைப்போல் கவனித்து உடனே சம்பளத்தை உயர்த்துவதுதான் நியாயமாகயிருக்குமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஜமாபந்தி காலத்தில் ஆகும் ஏராளமான செலவில் ஒரு பாகத்தை உளவடைக்கும்படியாக கொடுத்துவந்த ஜமாபந்தி படி ரூ. 10-யும் நிறுத்திவிட்டது வருந்தத்தக்கதாயிருக்கிறதென்றும், அதை மறுபடியும் கொடுக்கும்படி செய்வதுதான் நியாயமாகுமென்றும், நிறுத்திய கால முதல் சேர்த்துக்கொடுக்கும்படி உத்திரவாக வேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்

### கவர்ன்மெண்டு ஆர்டர்.

நெ 1243 mis 25—6—29.

கவர்ன்மெண்டார் நன்னிலம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் அனுப்பிக்கொண்ட மிமோரியல் போர்டார் மூலமாய் வந்ததின்பேரில் யாதொன்றும் செய்யக்கூடியதில்லை என்பதை மிமோரியல்தாரர்களுக்கு தெரிவித்துவிடவும்; என்றுத்திரவு பிறப்பித்துவிட்டார்கள்

## WELCOME ADDRESS

TO

# D. H. BOULTON ESQR., I.C.S.,

*Collector of Tanjore*

BY

## The Village Officers' Association,

**Mannargudi Taluk.**

Honoured Sir,

It is no small privilege and a matter of no little pleasure for us the Village Officers of the Mannargudi Taluk, to accord to your gracious Eminence a cordial greeting in our humble midst. It is no employment of the rhetorical figure of hyperbole to say that our joy knows no bounds in this matter of welcoming your Honour in our midst and we fear that our language. mild and modest as it is in our view, falls short to express what our hearts feel over-flowingly.

Revered Sir, without the least fear of the charge of adulatory platitude or platitudinous adulation missile at our doors, we here take occasion to unanimously express the consensus of our view that it is a stroke of good fortune for which we should be highly thankful in that we have been blessed with a benevolant and sympathetic District Collector in your personage to whose innate magnanimity and transparent generosity we sanguinely look up for the amelieration of our present unenviable position.

Respected Sir, though it is a undeniable fact recognised on all hands that the Village Officers play no mean part in the British Administration, neverthless it is sad irony of their fate that they are the most neglected forlorn and forsaken, in respect of their prospects of pay and treatment while all other Government servants from the topmost to the lowest of the rung have, for aught we know and believe, received meet recognition at the hands of the Government, ignoring the poor village functionaries alone whose volume and utility of work is none the less important to the Government.

So, Most-beloved Sir, we respectfully implore that your honour, sympathetic, benevolent, fair-minded and magnanimous as your Honour proves to be—terms deliberately weighed and restricted in order to avoid the odious smack of undue adulation—will not take our loving and sincere terms about you and mere stereotyped lip-epithets and that you will take an ample initiative to better our prospects in all desirable directions in consonance with the position we hold as the buttress of the British Administration in India.

Exhaulted Sir, we beg to conclude with an earnest orison to the omnipotent that He may vouchsafe to your gracious Honour the blessings of longevity and prosperity to render acts of beneficence and munificence to all.

We beg to remain,
Honoured Sir,
Your most obedient Servants,
**VILLAGE OFFICERS,**
**MANNARGUDI TALUK.**

Mannargudi,
8—6—29.

### கும்பகோணம் தாலூகா, கி. உ. சங்கம்.

26—5—29 ல் நடந்த மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

1. மீட்டிங்கிற்கு விஜயம்செய்த கிராம உத்தியோக சகோதரர்களுக்கு காரியதரிசியால் நல்வரவு கூறப்பட்டது

2. கன்னாரக்குடி கி. மு. ஸ்ரீமான் ஐயாசாமியய்யர் அக்கிராசனம் வகித்தார்.

3. மாத்தூர் கர்ணம் ஸ்ரீமான் குப்புசாமி அய்யர் நாளது 1338-ம் பசலி ஜமாபந்தியில் கி. உ. க்கள் படும் அல்லல்களையும் அதை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டிய முறைகளைப்பற்றியும் உபன்னியாசித்தார்.

4 செய்க்குப்பை கர்ணம் ஸ்ரீமான் T.S. சொக்கப்பா முதலியாரால் 21—2—29ல் சென்னையில் மே. த. கவர்னர் அவர்களுக்குக்கொடுத்த மிமோரியலின் விஷயத்தை எடுத்துச்சொல்லப்பட்டது,

5. முன்னக்குடி கர்ணம் ஸ்ரீமான் சீனிவாசய்யரால் கிராமஉத்தியோகஸ்தர்களின் தற்காலநிலைமை என்பதைப்பற்றி உபன்யசிக்கப்பட்டது.

6. சிவபுராணி கர்ணம் ஸ்ரீமான் சாரங்கபாணி அய்யங்காரால் சங்கத்தால் நாம் அடையும் பலன்களைப் பற்றி உபன்யசிக்கப்பட்டது.



தீர்மானங்கள்.

1. நாளது 1338-ம் பசலியில் நடக்கிற ஜமாபந்தியில் கி. உ. களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களையும், ஏரான செலவுகளையும் கவனித்து அலவன்ஸ் தொகை கொடுக்க கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்யவேணுமாய் மகா-ள-ள-ஸ்ரீ சப்கலெக்டர் துரையவர்களுக்கு ஒரு மெமோரியல் 27-5-29ல் கொடுக்கவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது.

2. விழுப்புரத்தில் சமீபத்தில் நடக்கப்போகிற கி. உ. க்கள் மாகாண மகாநாட்டிற்கு இச்சங்கத்திலிருந்து சில பிரதிநிதிகள் அனுப்ப வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

3. இச்சங்கத்திற்கு மெம்பர்கள் சேர்க்கவும் சந்தாத் தொகை வசூலிக்கவும் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் இனிது நிறைவேறியது

### கும்பகோணம் தாலூகா கி. உ. சங்கம் மிமோரியல்.

கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள் அதிமுக்கியமான வேலைகளைச்செய்ய வேண்டியவர்களாயும், மிகக் குறைந்த சம்பளமுள்ளவர்களாயுமிருக்கிறோம்.

கொஞ்சகாலத்திற்குமுன் ஜமாபந்தி வெளியிடங்களில் நடந்துவந்ததினால் கவர்ன்மெண்டாருக்கு அனாவசியமான செலவுண்டாகிறதைக்கருதி தாலூகா ஹெட் குவார்ட்டர்களிலேயே ஜமாபந்தியை நடத்த ஆரம்பித்ததினால் கிராமஉத்தியோகஸ்தர்கள் குறைந்தது 15 நாளைக்குமேல் டவுனில் தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. தினம் ஒன்றுக்கு ரூ 1-4-0க்குமேல் செலவாகிறது. சென்ற 3-வருஷகாலமாக கொடுத்து வந்த சொற்ப அலவன்ஸையும் நிறுத்திவிட்டார்கள் ரூ 30-க்குமேல் ஒவ்வொருவருக்கும் செலவாகிறது. இத்துடன் எங்கள் தலையிலேயே மூட்டையைத்தூக்கிக்கொண்டு ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களிடத்திலும் தணிக்கைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

இத்துடன் கவர்ன்மெண்டாரிடம் பலதடவைகளில் எங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டுவந்தும் இன்னும் நல்லகாலம் பிறக்கவில்லை.

காலநிலையை அனுசரித்து கொடுக்கப்படும் சம்பளம் ஒருமாதத்தில் சிறிது காலத்திற்குக்கூட போதாததாயிருக்கிறது.

தாலூகா கச்சேரிக்கு வரும்படி சம்மன் செய்யப்படுகிற ஒவ்வொரு தினத்திற்கும் ரூ 2-க்கு குறையாமல் எங்களுக்கு செலவாகிறது. இதை கவர்ன்மெண்டார் கவனிக்கவேயில்லை.

ஆகையால், எங்கள் செலவுக்குப்போதுமானபடி அலவன்ஸ் கொடுக்கும்படியும், தாலூகாவுக்கு வரும் காலத்திற்கு எங்களுக்கு ஏற்படுகிற கிரமமான செலவுகளையாவது கொடுக்கும்படியும், ஜமாபந்தி காலத்திற்கு ஒரு மாதம் முந்தி முதல் தாலூகாகச்சேரியில் எங்கள் கணக்குகளை பந்தோபஸ்தாய் வைத்துக்கொள்ள ஒரு இடம் கொடுக்கவேணுமாயும், எங்களுக்குள்ள தொந்திரவுகளையும், கடமைகளையும், மதித்து கிரமமானபடி சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேணுமாயும், கேட்டுக்கொள்ளுகிறோம்.

## கிராம உத்தியோகஸ்தர்கள்,

—:x:—

விழுப்புரம் தாலூகா கி. உ. சங்க காரியதரிசி
ஸ்ரீமான், பி. ராமஸ்வாமி அய்யர்
எழுதுகிறார்.

சென்னைமாகாண கிராமஉத்தியோகஸ்தர்சங்கம் சார்பாகச்சென்ற பிப்ரவரி மீ 22உ மே.த. கோஷன் பிரபுவிடம் டெபுடேஷன் போனவிபரம் யாவரும் அறிவார்கள். அன்று மே.த கோஷன்பிரபு மிகவும் நயமாகப் புன் சிரிப்புடன் கிராம உத்தியோகஸ்தர்கள் ராஜாங்கத்துக்கு அஸ்திவாரக் கல்லென்றும், அவர்கள் தற்போது படும் கஷ்டத்தைத் தாம் உணர்ந்திருப்பதாயும், எல்லா குறைகளையும் தீர்க்க முடியா விட்டாலும் முக்கியமாயுள்ளவைகளைத்தாம் கட்டாயம் கவனித்து நிவர்த்திசெய்து விடுவதாயும் வாக்குறுதிசெய்தார்கள், அவர் சொற்படி நாளதுவரையில் யாதொருகுறையும் நிவர்த்தி செய்ததாக என் சிற்றறிவுக்கு எட்டவில்லை பிறர் கஷ்டமறியாமல் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நடந்து கொண்டவர்களில் கோஷன் பிரபுவும் ஒருவராகச் சேர்ந்து கொண்டதைபற்றி நான் மிகவும் வருந்துகின்றேன் ஆயினும் நம்பிக்கெட்டாரில்லை, நம் கஷ்டங்களைக் கலெக்டர் உத்தியோகத்திலிருந்து நன்கு உணர்ந்திருக்கும் மே.த. மார்ஷ் பாங்க்ஸ் துரை அவர்களை நமக்கு ஈஸ்வரன் கவர்னராகக் காட்டியுள்ளான்: மேற்படியார் நம்குறைகளைக் கட்டாயம்கவனித்து நிவர்த்திச்செய்வாரென்பதில் ஐயமில்லை, ஆயினும் பலவேலையில் ஈடுபட்டிருக்

கும் அவரை நம் விஷயமாக ஞாபகப்படுத்துவது நம்கடமை. ஆகையால், சென்னை மாகாணத்தி லுள்ள எல்லா கி. உக்களும் அவரவர்கள் சங்கச் சார்பாக டெபுடேஷனில் சொல்லிய குறைகளைத்தீர்மானமாகக்கொண்டுவந்து பாஸ் செய்து அவைகளைக் கெவர்ன்மெண்டுக்கு அறிவிக்கும்படி மிகவும் கேட்டுக் கொள்ளுகிறேன், விடாமுயற்சியினால் நாம் சகல கார்யங்களையும் வெல்லலாம் அதற்கு இதுவே நல்ல தருணம் மே. த. மார்க் பாங்ஸ் துரையவர்களும் கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளஉயர்வு முதலிய முக்கியமாயுள்ள குறைகளைச் சீக்கிரம் நிவர்த்திசெய்ய வேண்டுமாறு நிரம்பவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஓர் கிராமமுன்சீபுக்கு வெள்ளி. ஜூப்ளிக் கொண்டாட்டம்.

:o:

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள முன்னீர் பள்ளத்தில் கிராமப் பெரிய தனக்காரர், திருவாளர் மு சி. சங்கரநாராயண பிள்ளை யவர்கள் உத்தியோகமேற்ற இருபத்தைந்தாண்டுகௌரவச் செய்து வந்த அரியபெரிய நன்மைகளை யுத்தேசித்துக் கிராமத்தார்களால் டெண்பாடசாலையில், வைத்து 23—7—29ல் சில்வர் ஜூபிளியென்னும் வெள்ளித் திருநாள் வெகு விமரிசையாக நடத்திக்கனப்படுத்தினார்கள்.

அவ்வமயம் உள்ளூரிலும் அயலூரிலுமுள்ள கனவான்கள், பலர் கிரம்பிருந்தனர். பெரியதனக்காரவர்களை வாத்திய கோஷத்துடன் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். காலை 8 மணி முதல் அதிர்வேட்டுகள் முழங்கிக் கொண்டிருந்தன மாலை 5 மணிக்குச்சிற்றுண்டி யருந்திய பின் புகைப்பட மெடுக்கப் பட்டது.

சில்வர் ஜூபிளி கமிட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி திருநெல்வேலி டவுன் சப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான், என். கே நம்பியய்யங்கார், பி ஏ அவர்கள் தலைமை வகித்தார்கள், பென்ஷன் சப்போஸ்டுமாஸ்டர் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரவர்களால் ஆங்கிலத்தில், ஓர் உபசாரப் பத்திரமும், கமிட்டி காரியதரிசி, திருவாளர் கிருஷ்ணமூர்த்தி பி. ஏ, அவர்களால் தமிழில், ஓர் உபசாரப் பத்திரமும வாசித்துக் கொடுக்கப்பட்டன.

கிராம புனருத்தாரண மென்பதைப்பற்றி ஸ்ரீமான், சுப்பிரமணியய்யர், பி. ஏ. [ஹானர்ஸ்] அவர்கள் ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசினார்கள் அப்பால் பெரியதனக்காரவர்கள் 25, ஆண்டுகளாகக் குடிகளுக்குச் செய்து வந்த பல நன்மைகளையும் அரிய செயல்களையுந் திறமையையும் பற்றி ஸ்ரீமான், பென்ஷன் சிரஸ்தார் இராமசுவாமி அய்யரவர்கள் திரு. பாக்கர் பழனியப்பபிள்ளையவர்கள் திரு செயின்ட் சாவியர் கல்லூரிபுரொபஸர் கிருஷ்ணமூர்த்தி. பி ஏ. அவர்கள் முதலான கனவான்கள் ஆங்கிலத்திலும் ஹெக்டாரபீஸ்மாஸ்டர் ஸ்ரீமான்ராமகிருஷ்ணய்யரவர்கள் மேலகரஸ்ரீமான்ராமசுப்பய்யரவர்கள் பென்ஷன் ரெவினியூஇன்ஸ்பெக்டர் திருராமசுப்பிரமணியபிள்ளையவர்கள் தமிழாசிரியர் ஆள்வகம் திரு. மு. பொ. ஈசுரமூர்த்திபிள்ளையவர்கள் முதலான கனவான்கள் தமிழிலும் வியந்து பேசினார்கள். அதற்குப் பதிலாக தாம் தம்முடைய கடமையைச் செய்து வருவதாயும் இவ்விதம் கிராமத்தார் நன்றி செலுத்தியதற்காக அவர்கள்பால் அன்பு பாராட்டுவதாயும் இறைவன் அருளை முன்னிட்டு இன்னும் வேண்டும் நன்மைகளைச் செய்யத்தாம் கடமை பட்டிருப்பதாயும் பெரியதனக்காரவர்கள் ஆங்கிலத்தில் தெளிவாகப்பேசினார்கள் தலைவரவர்கள் விரிவும் விளக்கமுமான முடிவுரை கூறியதன் பின்னர் காரியதரிசியால் முறையே வந்தனங்கூறி தலைவரவர்களுக்கும் பெரியதனக்காரவர்களுக்கும் தனித்தனியே பூமாலை சூட்டிச் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது. இரவு 9 மணிக்கு அனைவரும் உணவருந்தியதின் பின்னர் திருநெல்வேலி ஸ்ரீமதி ஜெயபால செல்லம்மாளால் இசைக் கருவிகளுடன், "வள்ளியம்மை திருமண" மென்னும் கதா காலக்ஷேபம் நடைபெற்றது மேற்படி வெள்ளி ஜூப்ளிக்கொண்டாட்டத்தை அன்போடு சிறப்பாகவும் குறித்தகாலம் வரையரை தவறாமலும் நடைபெறுமாறு செய்த மேற்படி கமிட்டி காரியதரிசி திருவாளர், சு கு சங்கரநாராயண பிள்ளையவர்கள் எடுத்து கொண்ட சிரமத்துக்குக் கிராமத்தார்கள் நன்றி பாராட்டக்கடமைப் பட்டவர்களாகிறார்கள்.

கிராம உத்தியோகஸ்தர்களால் பல நன்மைகளையடைந்த குடிகள் அன்போடு நன்றி பாராட்டி வெள்ளி ஜூப்ளிக் கொண்டாட்டம் இதுவரை எந்தக் கிராமத்திலாவது நடத்தியதாகக் கேள்வி யுற்றதில்லை முன்னீர்ப்பள்ளம் கிராமத்தில் இவ்வித கொண்டாட்டம் நடைபெற்றதைப் பற்றி மேற்படி கிராமத்தார்களுடையவும் பெரிய தனக்காரர் திருவாளர் மு. சி சங்கர நாராயண பிள்ளையவர்களுடையவும் பெருந் தன்மைக் குணங்களை பெரிதும் பாராட்டுகிறோம்.



# ராணாபிரதாபசிம்மன்,

அல்லது

## "ரஜபுத்திர தேச பக்தி,"

(ஸ்ரீமான், S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved)

(214-வது பக்கம் தடர்ச்சி)

மானசிம்மன்:—அரசே தாங்கள் நினைப்பது சரியென்றே கருதுகிறேன். இல்லேல் சக்திசிம்மன் நம்மைக் காண வந்திருப்பதற்கு காரணம் என்ன? உலகமான உங்களைப் படைத்த கடவுள்; ஓர் சிறிய நாட்டைமாத்திரம் விலக்கிவைப்பரோ? தங்களுடைய வெற்றிக்கு ஓர்எல்லை இல்லை.

அக்பர்:—நான் நினைப்பதுபோல் சக்திசிம்மன் மீவாரத்துக்கும் பிரதாபனுக்கும் விரோதியாய் நம்மிடம் வந்திருப்பானாகில், பிரதாபனைப்பற்றி நாம் அவ்வளவாக கவனிக்கவேண்டியதில்லை. சிறிதுகாலத்தில் அவனும் நமக்குப்பணியவேண்டிவ னென்பதில் சந்தேகமில்லை.

மானசிம்மன்:—சக்திசிம்மன் நம்முடன் உறவாடிவிற்க விரும்பி மீவாரத்துக்கு விரோதியாக நம்மோடுவந்திருந்தபோதிலும், இதனால் பிரதாபன் மனத்தளர்ச்சியடைந்து மீவாரத்தை கைவிட்டு விடுவா னென்றாவது, தன்னுடைய நோக்கத்தினின்றும் பகைமையின்றும் தளர்ந்து விடுவான் என்றாவது என்னால் நினைக்க முடியாது. அவனைப்போன்ற மனிதர்கள் இவ்வுலகில் மிகக்குறைவு அவனைப்போன்ற பிரதாபர்கள் இரண்டொருவர் நம்முடைய பக்கத்திலிருந்தால் இந்துஸ்தான் முழுவதுமல்ல, இவ்வுலகமே நமக்குள் அடங்கிப்போகும் ஆயினும் நாம் நம்முடைய முயற்சியைக் கைவிடாது நின்றோமாகில் மீவாரம் ஒரு நாள் நமக்குத்தலைவணங்கும்படி செய்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது

அக்பர்:—மீவாரத்தை உன் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டு மொகலாய ஆட்சியை அங்கு ஏற்படுத்த வேண்டு மென்பதொன்றே என்னுடைய நோக்கமல்ல சித்தூர் ராணாவின் உயர்குலத்தைச்சேர்ந்த செல்வக்குமரி ஒருத்தி [illegible]வையும் அவனைச்சேர்ந்த ராஜபுத்திரர்களையும் செய்து கொல்வதே எனது உண்மையானநோக்கம்.

மானசிம்மன்:—ஆம் தங்களுடைய நோக்கம் எனக்கு நன்கு தெரிந்ததேயாகும்; தங்களிடம் இவ்வளவுபழகி தங்கள் நோக்கங்களை அறிந்துக் கொள்ளாமல் யான் இருக்கமுடியுமா?

அக்பர்:—ஆம் நாழிகையாயிற்று என் இன்னும் சக்திசிம்மனை இங்கு அழைத்து வரவில்லை?

மானசிம்மன்;—(கிழேகவனித்து) மாடிப்படியில் சத்தம் கேட்கிறது, அவனும்இதோவருகிறான். யான்போய் வருகிறேன், தாங்கள் தனியாக இருந்து விஷயங்களைப் பேசி உண்மையை அறிந்துகொள்ளுங்கள். பிறகு பேசிக்கொள்வோம்,

அறையின் கதவு திறக்கப்பட்டது. சக்திசிம்மன் உள்ளே நுழைந்து பாதுஷாவை வணங்கினான். அக்பர் தனது மனதினிடத்தே நிகழும் கொடிய எண்ணங்களை வெகுதந்திரமாக தனது கயவஞ்சகமான புன்முறுவல் பூத்த முகத்தினால் மறைத்து சக்திசிம்மனை ஆசையுடன் வரவேற்று தன்பக்கத்திலிருந்தஆசனத்தில் இருத்தினான் அவனுடைய முகத்தினது தோற்றம் கொடுவிடம் நிறைந்த நாகப்பாம்பை உள்ளே மறைத்து, அழகிய வர்ணத்துடன் வெளியே பிரகாசிக்கின்ற தாமரைமலரைப்போல இருந்தது. முதலில் பேச ஆரம்பித்து அக்பர்:-சக்திசிம்மரே! வரவேண்டும் நீங்கள் நேராக உதயபுரத்திலிருந்துதான் வருகின்றீர்களென நினைக்கின்றேன் ராஜபுத்திரர்களுடைய வரவினாலும் சேர்க்கையாலும் அளவற்ற ஆனந்தத்தை அடைகிற என் மனம் இன்று மீவாரத்திலிருந்து வந்த உங்களைக்கண்டு பெரிதும் விம்மிதம்

ராஜபுத்திரர்களிடமிருந்து என் முன்னோர்களும் மாபினர்களும் எக்காலும் பெறாத ஒரு கவுரவத்தையும் சிநேக சம்பந்தத்தையும் யான் அடைந்ததைக் குறித்து நான் என்னையே பாராட்டிக்கொள்ள உரிமையிருக்கின்றது. ஆனால் மீவாரநாடு ஒன்றுமாத்திரம் என்னை ஒரு பொருட்டாக நினைத்து எச்சமயத்திலும் நடந்து கொண்டதே யில்லை மீவாரமும் அதன் அரசர்களும் என்றும் எமக்கு தீராப் பகைவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர் மொகலாய ஆட்சியையும் முக்கியமாக என்னையும் கொடிய விஷம்போல் அவர்கள் வெறுக்கின்றனர் அந்நிய ஆட்சிக்குத் தலைவணங்குவதில்லையென்றபிடிவாதத்துடன் நிற்கின்றனர் பொதுவாக என்னைப் பெரிதும்வெறுத்து, என்னிடம் பகைமைபூண்டு இலக்ஷியம்செய்யாது செருக்குடன் நிற்கும் மீவார நாட்டிலிருந்து, நான் எதிர்பாராத ஓர்சமயத்தில் என்னிடம் வந்த உங்களைக்கண்டு நான் பெரிதும் சந்தோஷமடைகிறேன். முக்கியமான காரியம் ஒன்றை நாடியே நீங்கள் இவ்வளவு தூரம் கடந்து வந்திருக்கவேண்டும். சாவகாசமாக விஷயங்களை நாம் கலந்து பேசிக் கொள்ளலாமாகிலும், தாங்கள் வந்த காரியத்தை சுருக்கமாகக் கூறவேண்டுமென்று விரும்புகிறேன்.

சக்தன்:—அரசே! தாங்கள் நினைத்தபடி நான் நேராக உதயபுரத்திலிருந்துதான் வருகிறேன். நான் அவ்விடமிருந்து தங்களிடம் வந்ததைக்குறித்து தாங்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. புகழ்பெற்றஒருவனுக்கு அவன் எதிர்பாராத இடங்களிலிருந்தும் புதிய சிநேகங்கள் ஏற்படுவது அருமையோ? அதிலும் என்போன்ற துரதிஷ்டசாலிகள் தங்களைப்போன்ற சக்கிரவர்த்திகளுடைய உதவியை நாடி வந்துவிட்டு வருவது ஓர் சகஜமான விஷயமேயாகும்.

அக்பர்:—சக்தரே! நீங்கள் கூறுகிற வார்த்தைகளிலிருந்தும், உங்கள் முகத்தோற்றத்திலிருந்தும், ஏதோ சொல்லொணாத துயரத்தினால் நிறைந்தமனதுடன் தாங்கள் வந்திருப்பதாக தோன்றுகின்றது. நாட்டில் ஏதாவது கலகம்ஏற்பட்டதோ? ராஜகுடும்பத்தில் ஏதேனும் சண்டையோ? இல்லாவிடில். தங்களுடைய சகோதரரான பிரதாபசிம்மருடன் சேர்ந்தமனஸ்தாபமோ? ஆனால் அவர் மிகுந்தகுணசீலர்என்று நான் கேள்விப்படுகிறேன். தங்களுடைய துயரத்திற்குக் காரணம் யாதாக இருக்கலாம்?

சக்தன்:—நீதி வழுவாது நடக்கும் செங்கோல் மன்னருடைய ஆட்சியில் ஓர் நாட்டில் கலகங்கள் நடக்குமோ? மீவாரத்தில் கலகங்க ளொன்றுமில்லை. ராஜகுடும்பத்தில் சச்சரவுகள் ஏற்படுவதற்கும் நியாயமில்லை. செல்வம் நிறம்பிய இடங்களுக்கு பங்காளிகளும் பாத்தியதைகளும் உண்டு. செல்வமிழந்து தவித்து நிற்கும் மீவாரத்துக்கு ராஜகுடும்பத்தில் சண்டைகள் இருக்குமா? இருப்பினும் சாமர்த்திய சீலரான என் சகோதரர் அவற்றை வெகு அழகாக சீர்படுத்திவிடக் கூடியவரே. தாங்கள் மூன்றாவதாகக் கூறிய விஷயத்திலேதான் கொஞ்சம் உண்மையிருக்கிறதென்று யான் கூறவேண்டும்.

அக்பர்:—தன் புன்முறுவலை மாற்றி, அப்படியாயின் பிரதாபசிம்மருக்கும் தங்களுக்கும் ஏதோ மனஸ்தாபம் நிகழ்ந்திருக்கிறதென்பதுதான் உண்மையோ?

சக்தன்:—ஆம் அதுவே உண்மை. அவர் என்னிடத்தில் நடந்துகொண்ட தோரணை எனக்குப்பிடிக்கவில்லை, பல உயர்குணங்கள் அவரிடத்தில் சிறந்து நிற்பது உண்மையே யாயினும், என்னை அவர் நடத்தியது ஓர் பெரிய கொடுமையே. ராஜகுமாரனை ஓர்சகோதரனை கேவலம் ஓர் பள்ளிச்சிறுவன்போல முற்றிலும் அடக்கியாள விரும்புவதும், அளவின்றிக் கண்டிப்பதும் எக்காலத்தும் வெறுக்கப்படுகின்றதன்றோ? அக்பரை முன்னவனென்றும், பணிந்துநடந்து கஷ்டங்களை ஏற்கும் சுபாவம் என்னிடமில்லையென்றும், அவர்என்னை ஓயாது கண்டித்து வந்தார்,

அக்பர்:—அதனால் தங்களுடைய மனதில் அவர்மீதில் ஓர் வெறுப்பு ஏற்பட்டதோ,

சக்தன்:—அவர் கண்டிப்பதுடன் நின்றுவிடவில்லை, நாங்களிருவரும் வேட்டைக்குச் சென்றிருந்த காலத்தில் ஒருவருக்கொருவர் கத்திச்சண்டை ஒன்று செய்தோம்,

அக்பர்:—அப்படியா! வேடிக்கையான சண்டையா? அல்லது

சக்தன்:—என்னைப்பற்றியவரையில் அது வேடிக்கை சண்டை யல்லவென்றே நான் கூறவேண்டும், என்னுடைய அகம்பாவத்தையும் செருக்கையும் ஒழித்துவிட வேண்டுமென்று நினைத்து, தமக்குள்ள முழு சக்தியைக் கொண்டு தாக்கி, என்னை வீழ்த்தவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் சண்டைசெய்தார். அவர் என்மேல் செலுத்திவந்த ஆதிக்கத்தை அடியோடுசிதைத்து எறியக் கூடிய ஓர் வெற்றியை அவர்மீது எனகத்தி சாமர்த்தியத்தின் மூலமாக அடையவேண்டுமென்ற கருத்துடன் நான் போர் செய்தேன். அச்சண்டையில் ஏற்பட்ட முடிவு என்னை அவமானத்திலும், துக்கத்திலும், ஆழ்த்தியது. பிரதாபசிம்மரின் பராக்கிரமத்திற்கு முன்னால் நான் சிறிதும் நிற்கமுடியவில்லை. அன்று என்சரீரத்தில் ஏற்பட்ட சில காயங்கள் இன்னும் சரியாக ஆறவில்லை, சகோதரனுடைய கையால் அடைந்தாலும் தோல்வி தோல்வியே யன்றோ? போதிய ஆற்றலின்றி அதனால் தோற்கடிக்கப்பட்டு, அவமானமும் துக்கமும் ஒருங்கேபீடிக்க ரோஷம் ஒரு பக்கத்தில் பற்றியலைக்க, பெரிதும் வாடினேன், சகோதரருடன் கூட இருப்பதற்கேனும் அவருடன் மறுமுறை பேசுவதற்கேனும் எனக்குவிருப்பமில்லை. அவரை செருக்கொழித்து காணவேண்டுமென்று என்மனம் ஆசை கொண்டது. அவரைவிட்டு நீங்கத் தீர்மானித்து நாட்டைவிட்டு வெளியேறினேன். வெளியேறுவதற்கு முன் கடிதமொன்றும் அவருக்குஎழுதி, நான் இனி அவருக்கு ஓர் பகைவனென்பதை அறிவித்துவிட்டே புறப்பட்டேன். யான் அங்கிருந்து நேரகக் காந்தார நாடடைந்து, அந்த அரசு செலுத்திய என்னுடைய மற்றொரு சகோதரனாகிய சகாசேனன் என்பவனைக்கண்டு அவனிடம் சிலநாள் தங்கினேன். மொகலாய ஆட்சிக்கு அநுகூலமாக அவனைத்திருப்பி, தங்களிடம் சிநேகம் செய்து கொள்ளும்படி அவனைப்பெரிதும் வற்புறுத்தினேன். அவனும் ஒருவாறுஇணங்கினன். சில தினங்களில் அவன் இங்கு வருவான் என்று எதிர் பார்க்கிறேன். என்னுடைய துக்கத்தையும் அதன்காரணத்தையும் தங்களுக்கு விளக்கமாகக் கூறிவிட்டேன். ரோஷத்துடன் பழிவாங்க எண்ணி, துணைநாடி இங்கடைந்தேன். தங்களுடைய நட்பும் தங்களுடைய முயற்சிகளில் ஓர்கூட்டுறவும் எனக்கு இனி வேண்டும். மீவாரத்துக்கு தீங்குசெய்ய என் மனம் சற்றும் இணங்கவில்லையெனினும், என்மனதுக்கு பெருந் துயரளித்த பிரதாபசிம்மரை அடக்கி விடுவதில் எனக்கு இஷ்டமே நான் கூறவேண்டியதைக் கூறி முடித்துவிட்டேன். இனி தங்களுடைய சித்தம்

(தொடரும்)



ஒரு மகானால் அடியேனுடைய முன்னோற்கு அளித்த முறைப்படி அவர்களால் கையாண்டு சௌக்கியத்தை யடைந்தும், அடியேனாலும் கையாண்டு நன்மைகள் அடைந்திருக்கிறதுமான

## சகலவித குஷ்டம்,

குன்மம், காசம், நீர்ரோகம், யாவணக்கால், கொடிய மேகங்கள், மேகப்படைகள், பாரிசவாய்வு, கைகால்பிடிப்பு, திமிர்வாய்வு, பவுத்திரம், கண்டமாலை, கன்னப்புத்து, லிங்கப்புத்து, யோனிப்புத்து, முதலான ரோகங்களை கடவுள் கிருபையால் தகுந்த ஔஷதங்களைக்கொண்டு நிவர்த்தி செய்யப்படும்,

மைசூர் கவர்ன்மெண்டாராலும், நியூயார்க், லண்டன், டோக்கியோ, பர்லின், பாரிஸ், அகமதாபாத், முதலிய தேசங்களின் இண்டர்நேஷனல் சொசைட்டியாராலும், இங்கிலீஷ் டாக்டர்களாலும் பரிசிலனைசெய்து மெடலும் நற்சாக்ஷிப்பத்திரங்களும் பெற்றது.

### கிருஷ்ணா டெண்டல் பாம்.

இவ்வற்புத ஆயுள்வேத பற்பொடி சகல பல்வியாதிகளையும்போக்கி பற்களை உறுதியாக்கக் கூடியது. பாட்டில் 1க்கு விலை அணா 4 எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்.

## M. R. ராஜகோபாலபிள்ளை,

சந்தானகிருஷ்ண ஆயுள்வேத ஔஷதாலயம், மன்னார்குடி.

## தியாகசமுத்திரம் T. S. ராஜகோபாலய்யர்,
## களஞ்சேரி T. P. அய்யாஸாமி அய்யர்,

ஜவுளி வியாபாரம். 48, பெரியதெரு, கும்பகோணம்

எங்களிடத்தில் பெங்களூர், தர்மாவரம், காஞ்சிபுரம், ஆரணி, பெனாரஸ், சூரச்சி முதலிய பலவர்ண ஜரிகைசேலை சுத்த பட்டுசேலைகளும், சேலம், காஞ்சிபுரம், ஆரணி, துகிலி, துறையூர், குளித்தலை, முதலிய பலவர்ண வெள்ளைஜவுளிகளும், ஜரிகை துப்பட்டாக்களும், மதுரை சுங்கடி சேலைகளும், துப்பட்டாக்களும் ஏராளமாய் ஸ்டாக்செய்து சாயத்துக்குகாரண்டியுடன் குறைந்த லாபத்துக்கு விற்றுவருகிறோம். தாங்களும், தங்கள் இஷ்டமித்திரர்களுக்கும்சொல்லி நேரில்வந்து பார்த்து வியாபாரத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## மலையாள மல்லிகைவிதை.

மலையாள மல்லிகைப்புஷ்பங்கள் குதூகலமான வாசனையும், அதி அழகுமுடையவை. செடி 6 அடி உயரம் வளரும். ஒரு செடியில் சுமார் 500 புஷ்பங்கள் ஒரே தடவையில் புஷ்பித்து அலங்காரமாய் இருப்பதைக்காண யாவரும் ஆச்சரியப்படுவார்கள். பூ 8 அங்குல சுற்றளவுடையது. நிறம் மஞ்சள். பங்களாக்களுக்கும் பூந்தோட்டங்களுக்கும் இது மிக அலங்காரமானது. தமிழ்நாட்டில் இதுவரையிலும் பரவாத புஷ்பச்செடி இது ஒன்றுதான். இன்னுமோர் விசேஷம் யாதெனில் இந்த மலையாள மல்லிகைச்செடிகள் வளரு[illegible] முதலிய விஷஜெந்துக்கள் பிரவேசிக்கமாட்டா.

[illegible]பாக்கெட் 1க்கு விலை ரூ 0—4—0. 1டஜன் பாக்கெட்டுகளுக்கு ரூ 2—8—[illegible]

இன்றே எழுதுங்கள்

எஸ். ஸி. நாதன்,
எலப்புள்ளி P.O, பாலக்காடு.

223477

---

**கவனியுங்கள் !** **கவனியுங்கள் !!**

அனேக வைத்தியர்களும், ஹக்கிம்களும் எங்கள் ஔஷதங்களை வாங்கி சொந்த ஔஷதங்களைப்போல் வேறு நாமங்களைச் சூட்டி விற்பனை செய்து வருகிறார்கள்.

### சந்திரப்பிரபா மாத்திரைகள்.

☞ தீவிரமான வெள்ளை, (வெட்டை) மூத்திர நாளங்களில் எரிச்சல், மூலம் நீர்ச்சுருக்கு இவைகட்கு பரம ஔஷதம் ! ஸ்திரீ ரத்னங்களுடைய வியாதிகளுக்கு நிகரற்ற ஔஷதம்.

16-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 1—0—0 தான் !
கேட்போருக்கு காட்லாக் இனம் ! உடனே எழுதுக !!

☞ ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
நெ. 26, பிராட்வே, மதராஸ்

---



அருளாளன்துணை.

## A. N. காதர் அவுலியா பரிமளசாலை.

### வாசனை சாமான்கள் விபரம்.

கலவைச்சந்தனம், பாச்சுத்தூள், சந்தனாதித்தைலம், சிவப்பு புகையிலை தாம்பூலமாத்திரை சந்தனவில்லை, கூந்தல்தைலம், சாந்துடப்பி, அரகஜா, ஸ்நானபவுடர், கேசபவுடர், புனுகு, ஜவ்வாது, பொன்னாங்கனி தைலம், கஸ்தூரி தந்தப்பவுடர், பலதினுசு அத்தர் வகைகளுக்கள், விசிய விர்த்தி ஈட்டுக்குருவி லேகியம், வஸ்திர வாசனைக்கவர், ஆனந்தஞ்சனம், அஷ்டரசம், கேள்விநூ மூலிகை திரவகம், யாவும் எங்களிடம் விலை சரசமாய் கிடைக்கும்.

தாங்கள், விலாசம்தெரிவித்தால் மேற்கண்ட வாசனைசாமான்களின் முழுவிபரம் அடங்கிய கேட்லாக்கு இனமாக அனுப்புவோம்.

எங்கள் விலாசம் :— A. N. காதர் அவுலியா பரிமளசாலை,
வலங்கைமான் (தஞ்சை ஜில்லா)

குறிப்பு:—எங்கள் பரிமளசாலைக்கு (ஆண்டவன் பிரஸ்) என்ற நாமம்சூட்டி அச்சுக்கூடம் ஏற்படுத்தி இருக்கிறோம். வெளியூர் அச்சுவேலைகள் குறித்த காலத்தில் அச்சிட்டு கொடுக்கப்படும்.

---

## பாலச்சந்திர பற்பொடி.

(சகல தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும்)
இதற்குசமானம் வேறு கிடையாதென்பது திண்ணம்.

**ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.**

கல்நார் கார்பாலிக்சேர்த்து நூதன முறையில் தயார் செய்யப்பட்டது.

**20வருடகாலமாய் பிரசித்திபெற்றது.**

பாலச்சந்திர டிப்போ, கும்பகோணம்.

---

ஆதிவேதுணை.

### பல் ஜாக்கிரதை.

தாங்கள் விலாஸம் தெரிவித்தால் ஜீவி கல்நார் பற்பொடி இனமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாஸம் :—
A. E. முஹையத்தீன்,
மெடிக்கல் ஹால்,
வலங்கைமான், தஞ்சைஜில்லா.

### கம்ம பாலன்.

(மூன்றும் வருடம்)
பிரதி தமிழ்மாதக்கடைசியில் வெளிவரும்
தமிழ் பத்திரிகை.

வருடசந்தா ரூபாய் ஒன்றுதான்.
கிராம வாசிகளுக்கு இன்றியமையாதது !
விளம்பர விகிதத்துக்கு எழுதுங்கள் !!

பத்திராதிபர் :—
ஆர். வேங்கடசாமி நாயுடு,
கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல்,
சிவகாசி சமீபம், S.I.R.

Rd. No. M. 1930. கிராமானுகூலன். Anl. Sub. Rs. 2.

மணம் மிகுந்தவை! குணம் நிறைந்தவை !!

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ.

அத்தர் வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில் :—எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணான படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லிப்படிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செப்பாகம் தவராது உயர்ந்த மாதிரியாக மணம், குணம், நலம், இம்மூன்றும் ஒற்றிருக்கும்படி தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச்செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறோம், ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனை சாலைக்கு விஜயம்செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனை சாலையைப் பற்றி சிபார்சுசெய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

உயர்தர மாதப்பத்திரிகை !) உ (இரண்டாவது வருடம் !!

5000 சந்தாதாரர்கள்.

# கி ரா ம ா னு கூ ல ன் .

கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உண்மையாயும் தைரியத்துடனும்

விசேஷ தியாகஞ்செய்து உழைத்துவருகிற

## ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்,

மிராசுதார்கள் விவசாயிகள் கிராம உத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், பிராஞ்சு போஸ்டு மாஸ்டர்கள், ஐக்கிய நாணயசங்கங்கள், கிராம சுகாதாரம், கிராம புனருத்தாரணம் முதலிய விஷயங்களைப் பற்றி அநேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களுடனும், தேசபக்தி புகட்டும் சிறந்த நாவல்களுடனும் வெளிவரும் ஓர் உயர்தர மாதப்பத்திரிகை, ஆங்கில மாதச்சஞ்சிகைகளுக்கு சமானமாய் கிரௌன் 1 க்கு 4 அளவில் உயர்தரமாய் நடத்தப்படுகின்றது, இதுபோன்ற தமிழ்மாதச்சஞ்சிகை வேறு கிடையாது தமிழ்நாடெங்கும் புகழ்வாய்ந்த பத்திரிகை இதுவே,

கிராம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகத் தவறமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது. தங்கள் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்து சந்தாதாரராகும்படி செய்யுங்கள்,

விளம்பரம் செய்வோர்களுக்கு ஏற்ற பத்திரிகை

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாடுகளுக்கு ரூ. 2—8—0

மானேஜர்:—கிராமானுகூலன், கும்பகோணம்.

Printed at the Lord Ripon Press and Published by N. Apathsagaya Ayyar at Kumbakonam.